# வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள் 2020

வாக்கு – 253

ஓய்வூதிய திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு 10

# பொருளடக்கம்


## 01. நிறுவனம் சார் விபரக் குறிப்பு

1.1. அறிமுகம் ---6

1.2. நோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோளங---7

1.3. முக்கிய செயல்பாடுகள்யய ---8-9

1.4. நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம ---10-11

1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள ---12-19

நிர்வாகப் பிரிவு --- 12

பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு --- 13

மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு --- 13-14

சத்காரப் பியஸ்ஸ --- 14

கொள்கைப் பிரிவு --- 14

ஆயுத சேவைகள் ஓய்வூதியப் பிரிவு --- 15

வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு --- 15

விதவைகள் அநாதைகள் ஓய்வூதியப் பிரிவு--- 15

கணக்குப் பிரிவு --- 16-17

பொதுச் சேவை நம்பிக்கை நிதியப்பிரிவு --- 17

சட்டப் பிரிவு--- 17

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு --- 18

தகவல்த் தொழில் நுட்பப் பிரிவு --- 18

ஊடகப் பிரிவு --- 18

தபால்ப் பிரிவு --- 18

ஓய்வூதியர்கள் சங்கத்தின் நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு --- 18

வணிகத் துறைகளின் ஒருங்கிணைப்பு --- 19

## 02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

விசேட கருத்திட்டங்களள--- ---22-36

சவால்கள ---36

ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்கால திட்டங்கள --- 36-37

## 03. 2020.12.31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான நிதி செயல்திறன

3.1. நிதி செயல்திறன் அறிக்கை ---40

3.2. நிதி நிலை அறிக்கை ---41

3.3. காசுப் பாய்ச்சல் அறிக்கை ---42

3.4. நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு ய---43

3.5. வருவாய் சேகரிப்பில் செயல்திறன -----------------------------------------------------------------------------------------44

3.6. ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கான பயன்பாட்டின் செயல்திறன ---------------------------------------------44

3.7. நி.ஏ 208 இற்கமைவாக இத் திணைக்களம்/மாவட்டச் செயலகம்/ ஏனைய அமைச்சுக்களின் ஒரு பிரதிநிதியாக உள்ள மாகாணசபைகள்/ திணைக்களங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள-----------------------------------------------45

3.8. நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயல்திறன ----------------------------------------45

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை --------------------------------------------------------------------46-67

**04. செயல்திறன் குறிகாட்டிகள**

4.1. நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)-------------70-73

**05. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் செயல்திறன**

5.1. அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள ங----------------------------------------------76

5.2. நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனைகளும் அதன் சவால்களும ----------------------------76

**06. மனித வள விவரம்**

6.1. ஆளணி முகமைத்துவம -------------------------------------------------------------------------------------------78

6.2. மனித வள அபிவிருத்த -------------------------------------------------------------------------------------78-79

**07. இணகக் குறிப்பறிக்கை** -----------------------------------------------------------------------------------------81-89

# 1

# நிறுவனம் சார் விபரக் குறிப்பு

## 1.1. அறிமுகம்

ஓய்வூதிய திணைக்களம் “அ” தர திணைக்களமாக 1970.12.23 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு தனது பயணத்தில் 50 ஆண்டுகளை 2020 ஆம் ஆண்டில் நிறைவுசெய்துள்ளது. திணைக்களத்தின் பொன்விழாவைக் குறிக்கும் இந்த பெருமைமிக்க வரலாற்றுக் தருணத்தில், ஓய்வூதியத் திணைக்களம், பொது சேவையில் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் எதிர்காலத்தை உறுதிசெய்யும் நோக்கில் அரச ஊழியர்கள்/ நீதித்துறை சேவை அலுவலர்கள் மற்றும் முப்படைகளின் அங்கத்தவர்கள் ஆகியோரது ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகளை செயல்படுத்தும் ஒரு தனித்துவமான பணியை செய்துவருகிறது.

இலங்கையின் ஓய்வூதியத்திற்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள் 23 ஆம் திகதி ஆனி மாதம் 1898 ஆம் ஆண்டில் 01 ஆம் இலக்க 1898 ஆம் விதவைகள் மற்றும் அனாதைகள் கட்டளை சட்டமாக அமுல்படுத்தியதனூடக ஆரம்பித்துவைக்கப்பட்டது. அன்றுதொட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயல்முறை முகாமைத்தும் பொது திறைசேரியின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் 1934 ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் திகதி ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு வெளியிடப்பட்டதுடன் இலங்கையின் குடியியல் ஓய்வூதியம் தொடர்பான அடிப்படை சட்ட ஆவணமாகவும் முன்னிலைப்படுத்தப்பட்டது அத்துடன் இவ் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு 1901 ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02 ஆல் இலங்கை சட்டத்தின் ஒரு பகுதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு 1972 ஆண்டு வைகாசி மாதம் 05 ஆம் திகதி மீண்டும் திருத்தப்பட்டது.

தற்போது ஓய்வூதியத் திணைக்களம் பொது சேவையின் உச்சத்தில் உள்ள ஒரு முன்னணி திணைக்களமாக அரசு அதிகாரிகளின் ஓய்வூதிய செயல்முறையை வெற்றிகரமாக நிர்வகிக்கிப்பதுடன் 650,000 க்கும் மேற்பட்ட பணனாளர்களைக் கொண்ட ஓய்வூதியர்களின் சமூகத்திற்கு நன்மைகளை வழங்கும் நிறுவனமாகவும் திகழ்கிறது.

மேலும் ஓய்வூதியத் திணைக்களம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக ஓய்வூதியர்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் நவீன தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் செயல்முறையை எளிதாக்குவதற்கும், சிறப்புத் சலுகைகள் மற்றும் வசதிகளை தனியார் துறையுடன் இணைந்து உறுதி செய்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஓய்வூதியத் திணைக்களம் இவ்வாண்டு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு அதிக பாதுகாப்பான சூழலை உறுதி செய்து, அவ்வழியில் திணைக்களம் அதன் பொன்விழாவை கொண்டாடுகிறது. இதற்கிடையில், ஓய்வூதியம் பெறாத அனைத்து மக்களும் பங்களிக்கக்கூடிய ஒரு சமூக பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான தேவை குறித்து முன்னிலைப்படுத்தியுள்ள ‘அனைவருக்கும் ஓய்வூதியம்’ என்ற திட்டமுன்மொழிவு நாட்டின் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பை விரிவுபடுத்துகிறது. அதன்படி, சமூகப் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவ துறைகளில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் உதவுவதற்கான உறுதியுடன் திணைக்களம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக்காட்டும் வயது வந்தோருக்கான சமூகத்தையும் முறையாக நிர்வகிக்கிறது.

2020 நிதியாண்டில் ஓய்வூதியத் திணைக்களத்தால் உறுதிசெய்யப்பட்ட சமூக பாதுகாப்பு நலன்களுக்கான பணி தொடர்பாக பௌதீக மற்றும் நிதி நடவடிக்கைகளின் நேர்மறையான அம்சங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட இந்த அறிக்கை, பொது நிதித் திணைக்களத்தின் 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கைக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.2. நோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

### நோக்கு

பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்

### செயற்பணி

அரச சேவையில் ஓய்வூதியர்களுக்கும் அவர்களின் பயனாளிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் அரச துறையினர் உள்ளடங்கிய சேவைபெறுநர்களினதும் சேவை வழங்குநர்களினதும் திருப்தியை உயர் மட்டத்தில் உறுதிப்படுத்தி, சட்ட ரீதியான நலன்களை வழங்குதல்.

### குறிக்கோள்கள்

- ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கட்டளை சட்டம், விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டம் மற்றும் அத்துடன் தொடர்புடைய ஏற்பாடுகளை அமுல்படுத்துவதனூடாக அவற்றிற்கிணங்க அரச ஊழியர்களின் ஓய்வூதிய பலன்களை வழங்கும் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல்.
- ஓய்வூதியம் தொடர்பான சட்ட கட்டமைப்புகள், விதிகள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு இணங்க அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதிய உரிமையை வழங்கல்.
- மாதாந்த ஓய்வூதிய சலுகைகளை தொடர்ந்து செலுத்துவதுடன் மொத்த தொகையாக செலுத்தப்படும் நன்மைக்கான உரிமையை முறையாக உருவாக்குதல்.
- அரசு ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியை ஒழுங்குபடுத்துவதிடன் நன்மைகளுக்கான உரிமைகளை உருவாக்குதல்.
- அரசாங்கத்தின் சார்பாக விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கான பங்களிப்புகளை சேகரித்தல் மற்றும் பிற வருவாய்களை சேகரித்தலும் நிர்வகித்தலும.
- ஆயுதப்படைகளின் ஓய்வூதியம் மற்றும் பிந்தைய நன்மைகளை நிர்வகித்தல்.
- சேவையின் போது காணாமற்போன மற்றும் ஊனமுற்ற முப்படைகள் மற்றும் இலங்கை காவல்துறை உறுப்பினர்களுக்கு இழப்பீடு, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்.
- சமூக பாதுகாப்பின் உலகளாவிய போக்குகளைப் ஆராய்ந்து நவீன சமூக பாதுகாப்பு முறைமைக்கான கொள்கைகளை வகுக்க உதவுதல்.
- ஆண்டு வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றத்திற்கு பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும்.
- தேசிய ஓய்வூதியர் தினத்தை நடத்துதல்.

## 1.3. முக்கிய செயல்பாடுகள்

ஓய்வூதியத் திணைக்களத்தின் பங்கு 04 முக்கிய செயல்முறைகளின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

### 1.3.1. ஓய்வூதியம் மற்றும் நன்மைகளை வழங்குதல்

**I. அரச மற்றும் நீதித்துறை அலுவலர்களை ஓய்வூதிய உரிமை உள்ளவர்களாக்குதல்**

ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் அரச ஊழியர்கள், நீதித்துறை அலுவலர்கள், பிரிவேனாக்களின் ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவற்றிற்கு உரிமையுள்ளவர்களாக்கும்பொருட்டு ”ட” அட்டவணையில் உள்ளடக்கல்.

**II. ஆயுதப்படை அங்கத்தவர்களை ஓய்வூதிய உரிமை உள்ளவர்களாக்குதல்**

ஆயுதப்படைகளின் அலுவலர்கள் மற்றும் பிற தரநிலை அணிகளில் உள்ளவர்களை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக்கு தகுதியுடையவர்களாக்குவதுடன் ஊனமுற்ற ஓய்வூதியம் மற்றும் தங்கி வாழ்வொரிக்கான கொடுப்பனவுகளுக்கு உரிமை பெறுக்கொடுத்தல்.

**III. விதவைகள் மற்றும் அனாதைகள் அல்லது தபுதாரர் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய உரிமைகளை வழங்குதல்**

சிவில் அலுவலர்கள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் ஆயுதப்படைகளின் உறுப்பினர் ஆகியோரின் மறைவுக்குப் பிறகு விதவைகள் அல்லது தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியங்களை வழங்குதல், கடமையின போது மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இறந்த அலுவலர்களின் மரணப் பணிக்கொடை மற்றும் அனாதைகள் மற்றும் ஊனமுற்ற ஓய்வூதியம் ஆகியவற்றிற்கு உரிமை பெறுக்கொடுத்தல்.

**IV. அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியத்தின் நன்மைகளுக்குகான உரிமைகளை பெற்றுக் கொடுத்தல்**

பொது சேவையில் ஓய்வூதியம் பெறாத நியமனங்களை கொண்டுள்ளவர்களுக்கு சேவையை நிறுத்தும் போது நன்மைகளை வழங்கல்.

### 1.3.2. கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தல்

ஓய்வூதியம், விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் மாதாந்தம் வழங்குதல், அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியத்தின் சலுகைகளை செலுத்துதல், விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தின் பங்களிப்புகளைத் திருப்பிச் செலுத்துதல், ஓய்வூதிய பணக்கொடை மற்றும் மரணப் பணக்கொடை செலுத்துதல், வாரிசுகளுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துதல், ஓய்வூதிய உரிமைகள் இல்லாமல் சேவையை விட்டு வெளியேறும் ஆயுதப்படைகளின் அதிகாரிகளின் சேவை பணிக்கொடை மற்றும் சிவில் சேவை பணிக்கொடை தயாரித்தல், மற்றும் வெளிநாட்டில் வாழும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சிறப்பு இழப்பீடுகள் செலுத்துதல் போன்ற கொடுப்பனவுகள் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கான செயல்முறை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.


### 1.3.3. பெறுகைகளை ஒழுங்குபடுத்தல்

உள்ளூராட்சி விதவைகள்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் நிதி, உள்ளூராட்சி அரசு சேவைகள் ஓய்வூதிய நிதி, அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியத்தின் பங்களிப்புகள், கட்டிடங்களுக்கான வாடகை மற்றும் விடுமுறை விடுதியிலிருந்து பெறப்படும் வருமானம் போன்றவற்றின் பெறுகைகளை ஒழுங்குபடுத்துதல்.

### 1.3.4. அபிவிருத்தி அணுகுமுறை

நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அரசாங்கத்தின் கொள்கை கட்டமைப்பை அடைவதை நோக்கமாகக் கொண்ட கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு உதவியை உறுதி செய்தல், சமூக பாதுகாப்புக் கொள்கைகள் குறித்த நிலையான தொடர் ஆய்வுகளை உறுதிசெய்தல், ஓய்வூதியத் திணைக்களத்தில் நன்மைகளைப் பெறுபவர்களுக்கு சிறப்பு சலுகைகளுக்கு உரிமை உறுதிப்படுத்தும் அதே நேரத்தில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், அரசாங்கத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

## 1.4. நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம்



# 2020.12.31 இல் ஓய்வூதியத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி

| பதவியின் பெயர் | பதவி | பொருந்தும் சேவை | சம்பள திட்டம் | அனுமதிக்கப் பட்டமொத்த எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி | நிரப்பப்ப டவேண்டி ய அளணி |
|---|---|---|---|---|---|---|
| மூது நிலை | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (விசேட) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS ( விசேட ) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மருத்துவ அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) | முதன்மை தரம் | SL-2-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (வகுப்பு I) | SL-1-2016 | 4 | 3 | 1 |
| | பிரதம கணக்காளர் | SLAcS( வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SLAcS( வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLAS( வகுப்பு II or III) | SL-1-2016 | 10 | 7 | 3 |
| | கணக்காளர் | SLAcS( வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணக்காளர் | SLAcS( வகுப்பு II or III) | SL-1-2016 | 9 | 8 | 1 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLITS( வகுப்பு II or III) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | சட்ட அலுவலர் | திணைக் | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணினி மென்பொருள் உருவாக்குநர் (ஒப்பந்த அடிப்படை) | திணைக் | | 3 | 1 | 2 |
| | | | | **34** | **26** | **8** |
| மூன்றாம் நிலை | நிர்வாக உத்தியொகத்தர் | PMAS (அதிவசேட) | MN-7-2016 | 4 | 3 | 1 |
| | மொழிபெயர்ப்பாளர் சிங்களம்- தமிழ் 01 சிங்களம்- தமிழ் 01 | TS | MN-6-2016 | 2 | 1 | 1 |
| | தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | SLICTS | MN-6-2016 | 5 | 1 | 4 |
| | | | | **11** | **5** | **6** |
| இரண்டாம் நிலை | தொழில் நுட்ப உத்தியோகத்தர் | SLTS | MN-3-2016 | 1 | 0 | 1 |
| | நிதி உதவியாளர் | RS | MN-4-2016 | 1 | 1 | 0 |
| | ஓய்வூதிய அலுவலர் | திணைக் | MN-4-2016 | 233 | 222 | 11 |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | DOS | MN-4-2016 | 505 | 417 | 88 |
| | முகாமைத்துவ சேவைகள் அலுவலர் | MSO | MN-2-2016 | 190 | 167 | 23 |
| | தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | SLICTS | MT-1-2016 | 5 | 4 | 1 |
| | ஆவண உதவியாளர் | திணைக் | MN-1-2016 | 141 | 120 | 21 |
| | உதவி மேசை கையாளுபவர் | திணைக் | | 2 | 0 | 2 |
| | | | | **1078** | **931** | **147** |
| முதன்மை நிலை | பங்களாப் பாதுகாப்பாளர் | திணைக் | PL-1-2016 | 2 | 1 | 1 |
| | சமையற்காரர்/ தோட்டக்காரர் | திணைக் | PL-1-2016 | 4 | 3 | 1 |
| | சாரதி | DS | PL-3-2016 | 12 | 11 | 1 |
| | மின்னியல் வல்லுநர் | திணைக் | PL-3-2016 | 1 | 0 | 1 |
| | அலுவலக உதவியாளர் | OES | PL-1-2016 | 56 | 44 | 12 |
| | | | | **75** | **59** | **16** |
| மோத்தம் | | | | **1198** | **1021** | **177** |

*தற்போது கடமையாற்றும் மொழிபெயர்ப்பாளர் - ஆங்கிலம் - தமிழ் 01

## 1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள

### நிர்வாகப் பிரிவு

இப்பிரிவு திணைக்களத்தில் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களதும் சுயவிபரக் கோவைகளையும் பேணிப் பாதுகாத்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் அடங்கலாக திணைக்களத்திற்கான உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், கட்டுமானப் பணிகள், பராமரிப்பு பணிகள் மற்றும் சேவைகளை வழங்கல் பொன்ற அனைத்து நிர்வாக நடவடிக்கைகளையும் தனது கடமையாக ஆற்றிவருகிறது.

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்த காலகட்டத்தில் கொவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாக இப்பகுதி தனிமைப்படுத்தப்பட்ட வலயமாக அறிவிக்கப்பட்டமையால் திணைக்களம் மூடப்படிருந்த நிலையிலும் அவசர அழைப்பு இலக்கம் (1970) தொடர்புடைய அலுவலர்களது கையடக்க தொலைபேசி இலக்கங்களுடன் இணைக்கப்பட்டு மேற்படி இலக்கத்தின் ஊடாக ஓய்வூதியர்களால் அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கு தகுந்த தீர்வுகளை வழஙகியதன் ஊடாக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தடையறாச் சேவை உறுதிப்படுத்தப்பட்டது.



ஓய்வூதியத் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொடக்கம் திணைக்களம் மாத்திரம் அக் கட்டடங்களைப் பயன்படுத்தாது பல நிறுவனங்களிற்கு கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கி அக்கட்டடங்களில்இருந்து மாதாந்த வாடகையைச் சேகரித்துவருகிறது. அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் கட்டட வாடகை மூலம் சேகரிக்கப்பட்ட மாதாந்த வருவாய் ரூ13,824,450.

ஓய்வூதியத் திணைக்களம் 2017 ஆண்டு முதல் 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தி வருகிறது. இச் செயன்முறையின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ஓய்வூதியர்களால் 140 பிரச்சனைகள் முன்வைக்கப்பட்டதுடன் அவற்றில் 133 பிரச்சனைகளுக்கு விடையளிக்கப்பட்டுள்ளது. ஏவ்வாறாயினும் 07 பிரச்சனைகளுக்கான திர்வுகள் வழங்கப்படவேண்டியுள்ளது.

அதே வேளை ஓய்வூதியர்கள் சமுதாயம் அடங்கலாக அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டுவரும் விடுமுறை விடுதிகளை நிர்வகிப்பதற்கும் தொடர்ந்து அவற்றைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் அதன்மூலம் அவ்விடுமுறை விடுதிகளிலிருந்த மாதாந்த வருவாயைப் பெற்றுக்கொள்தலும் ஆகும். இவ்விடுமுறை விடுதிகளிலிருந்த 2020 ஆம் ஆண்டில் ரூ 13,606,972.82 வருவாய் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக முன்பதிவுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமையால் இவ்வருவாய் ஒப்பீட்டளவில் கடந்த வருடத்தை விட குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுளது.

மேலும், 2020 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு ஜனாதிபதி செயலகத்தால் குறிப்பிடப்பட்டிருந்த ஓய்வூதியர்களது பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கொவிட் 19 பெருந்தொற்றுக்கு மத்தியிலும், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தமது பிரச்சனைகளுடன் வருகை தரும் ஓய்வூதியர்களின் சௌகரியத்தைக் கருத்திற்கொண்டு சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. மேலும் அவ்வாறான பிரச்சனைகளுக்கு தீர்வுகள் வழங்குவதற்கான செயல்முறையின் முன்னேற்றமும் மதிப்பாய்வு செய்யப்பட்டது. அதற்கமைய, கடந்தவருடத்தில் ஏறத்தாள 5000 பிரச்சனைகள் ஓய்வூதியர்களால் எழுப்பப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்கமைய அவற்றுக்கு தீர்வுகள் பெறப்பட்ட அதேவேளை தீர்வுகள் பெறப்படாத சிக்கலர்கள் தற்போதைய முன்னேற்றத்தில் காட்டப்பட்டுள்ளது.

## பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு.

பன்முகப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக ஓய்வூதிய கொடையளிப்ப செய்வதன் முக்கியத்துவம் யாதெனில் ஓய்வூதிய கொடையளிப்ப செய்வதற்கான முற்றுமுழுதாக அதிகாரம் நிறுவனத் தலைவருக்கே வழங்கப்பட்டுள்ளமை ஆகும். எவ்வாறாயினும், ஓய்வூதியத்தை கொடையளிப்புச் செய்வதற்கு முன்னராக அனைத்து அரச நிறுவனங்களாலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதியம் தொடர்பிலான அலுவலர்களுக்கு அவ்விண்ணப்பங்கள் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும். ஆவ்வாறு விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டியதன் முக்கிய நோக்கம், ஓய்வூதியருக்கான ஓய்வூதிய இலக்கம் வழங்கல், முதல் ஓய்வூதியத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் பணிக்கொடை வழங்கல் போன்ற விடயங்களை பூரணப்படுத்துவதற்கேயாகும்.

அதற்கமைய, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதில் இருந்து ஆரம்பிக்கின்ற அனைத்து செயல்முறைகளும் இயங்கலையினூடாகவே கையாளப்படுகின்றன. மேலும் ஓர் அலுவலர் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு 06 மாதங்களிற்கு முன்னராகவே தனது ஓய்வூதிய விண்ணப்பத்தைச் ஓய்வூதியத் திணைக்களத்திறகுச் சமர்ப்பிக்கக் கூடிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பெருமை கொள்ளும் விதத்தில் இம்முறைமையின் கீழ், ஓய்வு பெறும் திகதியன்றே ஓய்வுதியத்தை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படும் அதேவேளை பாரட்டுதற்குரிய சேவையை வழங்கிய ஓய்வுபெறும் அரச அலுவலருக்கு உரிய மரியாதையை வழங்கி அர்களின் இளைப்பாறலுக்கு திணைக்களம் வழிவகுக்கின்றது.



## மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு.

ஓய்வூதியக் கொடுப்பனவிலிருந்தான அனைத்தச் செயல்முறைகளுக்கான அதிகாரம் நிறுவனத் தலைவர்களுக்கு பரவலாக்கப்படவில்லை , 16/1995 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய நிறுவனத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படும் பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியம் தவிர்ந்த ஓய்வூதிய உரிமைகளைச் மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவினாலேயே சரிபார்க்கப்படுகிறது.

**இப்பிரிவால் ஆற்றம்படும் பணிகள்**

- ஒழுக்காற்று அடிப்படைகளில் ஓய்வில் அனுப்பப்படுபவர்களுக்கான ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் மற்றும் 12 ஆம் பிரிவு)
- திறமையின்மை அடிப்படைகளில் ஓய்வில் அனுப்பப்படுபவர்களுக்கான ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் மற்றும் 15 ஆம் பிரிவு)
- ஒழுக்காற்று அடிப்படைகளில் ஓய்வில் அனுப்பப்படுபவர்களுக்கான ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் மற்றும் 7 ஆம் பிரிவு)
- பதவிகள் இல்லாது ஒழிக்கும்போது அல்லது நிறுவனங்களை மூடும்போது ஓய்வில் அனுப்பப்படுபவர்களுக்கான ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் மற்றும் 7 ஆம் பிரிவு)
- நிரந்தர அடிப்படையில் விடுவிக்கையில் அவர்களது ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் மற்றும் 48 ஆம் பிரிவு)
- தனியார்பாடசாலை மற்றும் பிரிவேனாக்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- 04/2006, 07/2004 மற்றும் 44/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- மருத்துவ காரணங்களின் கீழ் ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவு)
- 20 வருட சேவையை பூர்தி செய்வதன் அடிப்படையில் ஓய்வூதிய உரித்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (30/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை)
- சேவைக்காலம், ஓய்வூதியம் மற்றும் நியமனம் ஆகியவற்றில் கொண்டுள்ள பிரச்சனைகளை கொண்ட ஓய்வூதிய விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுத்தல்.



## சத்கார பியஸ்ஸ

ஓய்பெற்ற பின்னர் ஒருதடவை மாத்திரம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு ஓய்வூதியரது வருகையை மட்டுப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கும் நோக்கத்துடனும் அவ்வருகையின் போது அவருக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் ஓய்வின் பின்னரான அனைத்து நன்மைகளையும் ஓய்வூதிய உரித்தையும் உறுதிப்படுத்துவதற்காகவும் 2015 இல் சத்கார பியஸ்ஸ ஸ்தாபிக்கப்பட்டது. ஆகையால் ஓய்வூதிய விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மட்டும் அவரது ஓய்வூதியத்தை ஆரம்பிப்பதற்காக சத்கார பியஸ்ஸ நேர்காணலுக்கு ஓய்வூதியர் அழைக்கப்படுகிறார். ஓவ்வொரு ஓய்வூதியருக்கும் சத்கார பியஸ்ஸ நேர்காணலுக்காக குறித்தொதுக்கப்பட்ட நேரமும் திகதியும் வழங்கப்படுவதுடன் அத்தினத்தில் திணைக்கள அலுவலர் குறித்த ஓய்வூதியருக்கான சேவையினை வழங்கக் காத்திருப்பார்.

அவ்வேளையில் ஓய்வூதியரின் ஆள் அடையாளம் சரிபார்க்கப்பட்டு ஓய்வூதியம் ஆரம்பிக்கப்படும், தங்கிவாழ்வோர் தொடர்பான தகவல்கள் சரிபார்க்கப்பட்டு ஓய்வூதிய உரிமைப் பத்திரம் வழங்கப்படும், ஓய்வூதியரது கைவிரல் அடையாளம் பெறப்படுவதுடன் ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்கப்படும்.

## கோள்கைப் பிரிவு

இப் பிரிவின் முக்கிய பங்கு, அரசு அலுவலர் மற்றும் ஓய்வூதியர்களின் சமூகத்திற்கு ஓய்வூதியத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட கொள்கை விடயங்களுக்கு விளக்கம் வழங்குதல், சூழ்நிலைக்கேற்ப் கொள்கை விடயங்களைத் திருத்துதல் மற்றும் புதிய கொள்கை முடிவுகளை எடுப்பதும் ஆகும்.

**இப்பிரிவால் ஆற்றம்படும் பணிகள்**

- ஓய்வூதியம் தொடர்பான கொள்கை விடயங்கள் தொடர்பில் தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- ஓய்வூதியத் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் சட்டவாக்க திருத்தங்களுக்கு பொருத்தமான அறிவுறுத்தல்கள் கடிதங்களை வழங்கல்.
- ஓய்வூதியக் கொள்கைகள் குறித்து தனிப்பட்ட முறையில் ஓய்வூதியர்களின் சமூகத்திலும் அனைத்து அரசு நிறுவனங்களின் மட்டத்திலும் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தீர்ப்பதற்குத் தேவையான விளக்கங்கள்/ அறிவுறுத்தல்கள் வழங்குதல்.



## ஆயுத சேவைகள் ஓய்வூதியப் பிரிவு

ஆயுத சேவைகள் ஓய்வூதியம் பிரிவு விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி ஆயுத சேவைகள் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவற்றைச் செலுத்துதல் போன்ற கடமைகளை 1949 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை இராணுவச் சட்டம், 1949 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க இலங்கை விமானப்படை சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை கடற்படை சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் ஆற்றி வருவதுடன் இச்சட்டங்களின் கீழ் இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை கடற்படை ஆகியவை நிறுவப்பட்டுள்ளன, மேலும் இந்தச் சட்டங்களில் அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுவருகின்றன.

**இப்பிரிவால் ஆற்றம்படும் பணிகள்**

- சேவை ஓய்வூதியத்திற்கு உரிமையை வழங்கல்.
- மாற்றிய பணிக்கொடை, இறப்பு மற்றும் சேவை பணிக்கொடை போன்றவற்றை செலுத்த நடவடிக்கை எடுத்தல்.
- ஊனமுற்ற ஓய்வூதியம், தங்கிவாழ்வோருக்கான கொடுப்பனவு, விசேட இழப்பீடு மற்றும் சேவைகளை மீளாய்வு போன்ற செயல்களுடன் இணைக்கப்பட்ட பணிகளில் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.

## வேளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு

இரண்டு வருடங்களுக்கும் மேலாக வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் இரட்டை குடியுரிமையுள்ள ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோர் தொடர்புடைய கிட்டத்தட்ட 10,000 ஓய்வூதிய கோவைகளின் ஒருங்கிணைப்பு, நிர்வாகம் மற்றும் மேற்பார்வை ஆகியவை வெளிநாட்டு ஓய்வூதிய பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு

இந்த பிரிவு 1898 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியச் சட்டம், மற்றும் 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் (ஆயுத சேவைகள்) மற்றும் அது தொடர்புடைய கட்டளைகள் மற்றும் உள்ளூராட்சி விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய நிதிச் சட்டத்தின் விதிகள் மற்றும் கடமையில் இருக்கும்போது அல்லது ஓய்வூதியம் பெற்றபின்னர் இறந்த அலுவலர்களின் விதவை , தபுதாரர், அனாதை அல்லது ஊனமுற்ற பிள்ளைகளுக்கான ஓய்வூதிய உரித்தை வழங்குவதுடன் பதிவுகளையும் மேற்கொள்தல்.

**இப்பிரிவால் ஆற்றம்படும் பணிகள்**

- விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் சிவில் மற்றும் நீதித்துறை சேவைகளில் அதிகாரிகளை பதிவு செய்தல்.
- விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்திற்கான உரிமையை உருவாக்குதல்.
- ஊனமுற்ற அனாதைகளை ஓய்வூதியத்திற்கு தயார்ப்படுத்தல்.
- மரணப் பணிக்கொடை உரிமை உண்டு.

## கணக்குப் பிரிவு

ஓய்வூதியர்களுக்கான சலுகைகளை செலுத்துவதன் மூலம் முறையான நிதி நிர்வாகத்தை பராமரிக்க இப்பிரிவு உதவுகிறது இதுவே திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளாகவுள்ளதுடன், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க, 253 ஆம் இலக்க வாக்கின் கீழ் பாராளுமன்றத்தால் வழங்கப்படும் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதுடன் திணைக்களத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் பிற வசதிகளை வழங்குதல்.

## மாதாந்தக் கொடுப்பனவுப் பிரிவ

அரச மற்றும் தனியார் வங்கிகள், கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஓய்வூதியர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்குவது போன்ற கடமைகளை இந்த பிரிவு செய்துவருகிறது, அதே நேரத்தில் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் வாழும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் மாதந்தோறும் ஓய்வூதிய வழங்கலை ஒழுங்குபடுத்துகிறது.

## பணிக் கொத டைக் கொடுப்பனவுப் பிரிவு

அனைத்து ஓய்வூதியர்களினதும் மற்றும் பிந்தைய பயனாளிகளினதும் ஒரே நம்பிக்கையான ஓய்வூதிய பணிக்கொடை, மரணப் பணிக்கொடை மற்றும் சேவை பணிக்கொடை ஆகிய கொடுப்பனவுகளின் மொத்த தொகை பற்றிய தகவல்களை பராமரித்தல் மற்றும் பொது திறைசேரியுடனான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் ஆகியவை இந்த பிரிவினால் செய்யப்படும் பணிகள் ஆகும்.

## முரண்பாடுகபள் பிரிவு

இறந்த அலுவலர்களின் ஓய்வுக்குப் பின்னர் அவ்வப்போது எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின்படி நடைமுறைப்படுத்தப்படும் சம்பள திருத்தங்கள் அல்லது மாற்றியமைப்புக்களிற்கேற்ப ஓய்வூதியத்தை மாற்றியமைத்தலும் ஓய்வூதியத்தை திருத்துதலும் அத்துடன் ஓய்வூதிய நிலுவைத் தொகையை செலுத்துதல் போன்ற பணிகளை இந்த பிரிவு செய்கிறது.

## விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு நிதிய முகாமைத்துவப் பிரிவு

மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்புகளை சேகரித்தல், அரசு ஊழியரின் சேவைக்காலத்தில் அவர் பொது சேவையை விட்டு வெளியேறினால் அல்லது பயனாளிகளுக்கு எந்த உரிமையும் இல்லாத நிலையில் பங்களிப்பாளர் மரணமடைந்தால் விதவைகள்/ தபுதாரர் அனாதைகளுக்கான ஓய்வூதிய உரிமை கோர பயனாளிகள் இல்லாத நிலையில் அரச ஊழியரிடமிருந்து மீட்கப்பட்ட பங்களிப்புகளை அந்தந்த அரச ஊழியர்களுக்கு அல்லது அவரது வாரிசுகளுக்கு திருப்பி வழங்கல் ஆகியவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு நிதிய முகாமைத்துவப் பிரிவின் முக்கிய பணிகளாகும்.

## பெறுகைகள் பிரிவு

முறையான கொள்முதல் நடைமுறைக்கமைய வருடாந்த கொள்முதல் திட்டத்தின் இலக்குகளின்படி திணைக்களத்தின் தேவையின் அடிப்படையில் பெறுதல், வாங்குதல் மற்றும் ஆலோசனை சேவைகள், சரக்குகள் மற்றும் சேவைகள ஆகியவற்றின் விநியோகம் இந்த பிரிவின் கீழ் அடங்குகிறது.

## மேலதிக கொடுப்பனவு மீட்டெடுத்தற் பிரிவு

கொள்கை சிக்கல்கள் காரணமாக பல்வேறு அரசு நிறுவனங்களால் ஓய்வூதியர்களுக்கு செலுத்தப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளை மீட்டெடுப்பது மற்றும் சேவை காலத்திற்குள் செய்யப்பட்ட தவறுகள் மற்றும் பிழைகள் ஆகியவற்றிற்கான அபராத பணத்தை வசூலிப்பது, மற்றும் மேலதிக சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக பி கணகு மீதியை அறவிடுவது, மேற்படி அறவீடுகள் ஓய்வூதியரின் ஓய்வூதியத்திலிருந்து அரசாங்கத்திற்கு அறவிட்டு அவை தொடர்பிலான தகவல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்தல அகியவை இந்த பிரிவின் முக்கிய பொறுப்புகள் ஆகும்.

## பொதுச் சேவைகள் வருங்காலவைப்ப நிதியம்

நிரந்தர பதவிகளை வகிக்கும், மாத சம்பளத்தைப் பெறும் ஆனால் அவர்களின் சேவையின் முடிவில் ஓய்வூதிய உரித்தற்ற ஊழியர்களுக்கு நிதி சலுகைகளை உறுதி செய்வதற்காக பொது சேவைகள் வைப்பு நிதியம் 1942 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 01 ஆம் திகதி 18 ஆம் இலக்க பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தால் நோக்கங்களும் குறிக்கோள்களும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் சாதாரண, தற்காலிக, ஒப்பந்தம் மற்றும் தினசரி ஊதிய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் போன்ற பரந்த அளவிலான சேவையை உள்ளடக்கி நன்மைகளை விரிவாக்கும் நோக்கில் அவ்வப்போது சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

ஓய்வூதியத் திணைக்களம் நிறுவப்பட்டதன் மூலம், நிதி அமைச்சின் கீழ் இயக்கப்பட்ட பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியம் 1970.12.23 ஆம் திகதி தொடக்கம் ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் பொது நிர்வாகத்தின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது மேற்பார்வையில் நிதி முகாமைத்துவ சபை அதன் அதிகாரங்கள் வெளியிடுகிறது.

முகாமைத்துவ சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் (தவிசாளர்)
2. பிரதிச் சட்டமா அதிபர் (சொலிசிட்டர் ஜெனரல்)
3. இரண்டு நபர்கள், அவர்களில் ஒவ்வொருவரும் அரசாங்கத் துறையின் தலைவர் அல்லது அத்தகைய துறைத் தலைவரின் பிரதி அல்லது முதன்மை உதவியாளர்
4. நிதியத்தில் பங்களிப்பாளராக இருக்கும் ஒருவர்

நிதியத்தில் உறுப்பினராக இருக்கும் அலுவலரின் சம்பளத்திலிருந்து 8% கழிக்கப்படுகிறது, மற்றும் ஊழியர் பணியாற்றும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 12% பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுகிறது.

## சட்டப் பிரிவு

உச்சநீதிமன்றத்தால் பெயரிடப்படும் சட்டமா அதிபர் திணைக்களம், மனித உரிமைகள் ஆணையம் மற்றும் ஒம்பூட்ஸ்மேன் உள்ளிட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு முன்னிலையாவதுடன் ஓய்வூதியத் திணைக்களம் சார்பில் பதிலளித்தல் மற்றும் ஓய்வூதியம் வழங்கல் மற்றும் கண்காணிப்புடன் தொடர்புடைய அனைத்து சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் பற்றிய விளக்கங்கள், பரிந்துரைகளை ஆகியவற்றை அனுப்புதல் போன்ற பணிகளைச் செய்ய திணைக்களத்தின் சட்டப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு



திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் தற்போதைய உள்ளக நிர்வாக முறையை ஆராய்வதன் மூலம் மோசடிகள் மற்றும் குற்றங்களைத் தவிர்ப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் உள்ளக உறுதிப்படுத்தலின் சரியான மற்றும் முறையான செயல்பாடுகள் குறித்து சுயாதீனமான மற்றும் நிலையான மதிப்பீட்டை மேற்கொள்ள உளளகக் கணக்காய்வுப் பிரிவு நடவடிக்கை எடுக்கிறது.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவ

ஓய்வூதியம் செலுத்தும் செயல்முறையை மிகவும் திறமையாகவும் துல்லியமாகவும் பராமரிக்கும் நோக்கில் ஓய்வூதியம் பெறுவோர் சமூகம், பிரதேச செயலகம் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றை தொடர்ந்தும் புதிய தகவல் தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகப்படுத்துவதனூடாக திணைக்களத்துடன் நேரடியாக ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் இந்த பிரிவு ஈடுபட்டுள்ளது.

## ஊடகப் பிரவு



அனைத்து செய்தித்தாள்களால் கவனம் செலுத்தப்படும் ஓய்வூதியம் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரிப்பதுடன், அத்தகைய தகவல்களை நிர்வாகத்தின் குறிப்புக்காக அனுப்புவதும் ஊடக பிரிவின் முக்கிய பங்கு ஆகும். மேலும் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியுடன் எதிர்பார்க்கப்படும் நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் தகவல்களைத் தொடர்புகொளவதை ஊடகப் பிரிவு உறுதி செய்கிறது. இதற்கிடையில், அதிகாரப்பூர்வ வலைத்தளம், அதிகாரப்பூர்வ முகநூல் பக்கம், அதிகாரப்பூர்வ யூடியூப் சேனல், இணையச் சஞ்சிகை மற்றும் ஓய்வூதிய வானொலி மூலம் தகவல்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கிறது. மேலும் ஊடக பிரிவு வெளிப்புற ஊடக நிறுவனங்களுக்கும் தகவல்களையும் வழங்குகிறது.

## அஞ்சல் பிரிவு

அஞ்சல் பிரிவு, திணைக்களத்தின் உள் பரிமாற்றத்தின் முக்கிய பயன்முறையாக முன்னிலைப்படுத்த முடிவதுடன் ஆகையால் அந்த நடவடிக்கைகள் நன்கு ஒருங்கிணைக்கப்படுவதை இப்பிரிவு உறுதி செய்கிறது. திணைக்களத்தால் பெறப்பட்ட மற்றும் அனுப்பப்படும் அனைத்து கடிதங்கள்/ கோவைகளை சம்பந்தப்பட்ட பிரிவுகள்/ நிறுவனங்களுக்கு எந்தவொரு பலவீனமும் இல்லாமல் திறமையாக அனுப்புவதே பிரிவின் முக்கிய பொறுப்பு.

## ஓய்வூதியர் கூட்டமைப்பின் நிர்வாகமும் ஒருங்கிணைப்பும்.

ஓய்வூதியர்களின் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஓய்வூதியர்கள் சங்கங்களால், திணைக்களத்திற்கு முறையிடப்படும் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும், சரியான தீர்வுகளை வழங்குவதற்கும், திணைக்களத்திற்கும் ஓய்வூதியர்களுக்கும் இடையில் சிறந்த தொடர்புகளை பேணுவதற்கும் ஒரு அலுவலர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக விசேடமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

## வர்த்தகத் துறை ஒருங்கிணைப்பு

ஓய்வூதியத் திணைக்களம் , வயது வந்த செயற் திறனுள்ள உறுப்பினராக ஓய்வூதியரை மாற்றும் நோக்கத்துடன், பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து மாதாந்த ஓய்வூதியத்திற்கு அப்பால் சென்று அவர்களுக்கு வழிவகுக்கும் வகையில் பல்வேறு புதுமையான திட்டங்களை செயல்படுத்துகிறது. எனவே இது தொடர்பாக திணைக்களம் மற்றும் தனியார் துறைக்கு இடையே நல்ல ஒருங்கிணைப்பு பராமரிக்கப்படுகிறது.

## 2

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## விசேட கருத்திட்டம்

### ஓய்வூதியர்களின் விரலடையாளத்தைப் பெற்றுக்கொள்தல்.

✓ உயிர் வாழ்ச் சான்றிதழைப் பெறுவதற்கான நடவடிக்கையை திணைக்களம் எடுத்துள்ளது, ஓய்வூதியர் உயிருடன் உள்ளாரா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் இது ஓய்வூதியரிடமிருந்து இதுவரை எடுக்கப்பட்டுவருகிறது, இம் முறைமை பயோமெட்ரிக் முறை மூலம் நவீன தொழில்நுட்ப அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர் தனது உயிர்வாழ் சான்றிதழை விவரங்களைக் கொண்ட படிவங்களை பூரணப்படுத்தி சமர்ப்பிக்கும் மிகவும் சிக்கலான முறையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக இப் புதிய முறைமை ஓய்வூதியருக்கு பொருத்தமான நேரத்தில் தனது விரல் அடையாளத்தைப் பயன்படுத்தி வழங்குவதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது. அதன்படி ஓய்வூதியம் பெறுபவர் இப்போது தனது விரல் அடையாளத்தை அவருக்குரிய பிரதேச செயலகத்திலோ அல்லது வேறு எந்த பிரதேச செயலகத்திலோ அல்லது ஒரு வங.



ஆண்டுதோறும் ஆயுள் சான்றிதழ் பெறுவதற்கான விரல் அடையாள முறையை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திறந்து வைக்கிறார்




ஒரு ஓய்வூதியர் புதிய வசதியைப் பயன்படுத்தி தனது விரல் அடையாளங்களை பதிவு செய்கிறார்

அதன்படி ஓய்வூதியர் விரல் அடையாளத்தைப் பயன்படுத்தி அவர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்க 2020 ஆம் ஆண்டில் 26 பிரதேச செயலகங்களில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கூறியவற்றைத் தவிர தீவு முழுவதும் உள்ள மக்கள் வங்கியின் 75 கிளைகள், பான் ஏசியா வங்கியின் 84 கிளைகள், தேசிய சேமிப்பு வங்கியின் 10 கிளைகள் ஆகியவற்றில் விரல் அடையாளம் வழங்கும் வசதிகள் இப்போது வழங்கப்பட்டுள்ளன.

### ஓய்வூதியர்களுக்கு இதுவரை பயன்படுத்தப்பட்ட புகையிரத அணைச் சீட்டு வழங்கல் முறையை எளிதாக்குதல்

✓ இதுவரை ஓய்வூதியருக்கு உரித்துடைய புகையிரதப் பற்றுச் சீட்டை பெறுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற் திட்டத்தை இலகுபடுத்தும் நோக்கில் ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை புகையிரதத் திணைக்களம் மற்றும் மொபிடெல் ஆகியவற்றுடன் இணைந்து ஓய்வூதியர்கள் தமது தேசிய அடையாள அட்டையையோ அல்லது ஓய்வூதிய அடையாள அட்டையையோ சமர்ப்பிப்பதன் ஊடாக புகையிரதப் பற்றுச் சீட்டை நேரடியாக பெற்றுக்கொள்ளும் வசதியை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய முறைமையின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர் தமது புகையிரதச் பற்றுச் சீட்டை (இருக்கை) இயங்கலையில் சில நொடிகளில் முன்பதிவு செய்யும் வசதியைக் பெற்றுள்ளனர்.



புகையிரத் நிலையங்களில் இருந்து ஓய்வூதியருக்கு புகையிரத பற்றுச்சீட்டை வழங்குவதற்கான திட்டத்தை ஆரம்பித்தல்

## விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தின் கீழ் பதிவை எளிதாக்குதல்

- ✓ ஓய்வூதியத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் அரச அலுவலர்களின் பிந்தைய பயனாளர்கள் நன்மை பெறும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இதுவரை பயன்படுத்தப்பட்ட கொடுப்பனவு செயல்முறையை எளிதாக்குவதன் மூலம் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தை செயல்படுத்தும் நோக்கில் திணைக்களத்தால் ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய முறை குறித்து அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் 03/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.



விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தை செயல்படுத்துவதற்கான புதிய ஆன்லைன் முறையைப் பற்றி பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்துதல்


## ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஓய்வூதிய உரிமையை உறுதி செய்தல்

- ✓ ஊனமுற்ற குழந்தைகளுக்கு ஊனமுற்ற ஓய்வூதியத்திற்கான உரிமையை வழங்க இதுவரை பயன்படுத்தப்பட்ட முறைமையின் அடிப்படையில், குழந்தையின் பெற்றோரின் மறைவுக்குப் பின்னர் அக் குழந்தை மருத்துவ சபைக்கு அனுப்பப்பட்டு அவர்களது ஊனம் பரிட்சிக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் பெரும்பாலான ஊனமுற்ற குழந்தைகள் தங்கள் ஊனமுற்ற ஓய்வூதியத்தைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களையும் தாமதங்களையும் சந்திக்க நேரிடும். இந்த சூழ்நிலையை மாற்றும் நோக்கில், அரச அலுவலர்களுக்கு தமது குடும்பத்தில் உள்ள ஊனமுற்ற குழந்தைகளின் , ஊனத்தை பரீட்சிக்க, அந்தந்த நிறுவனத் தலைவருக்கு கோரிக்கை வைப்பதன் மூலம் அக் குழந்தையை மருத்துவ சபைக்கு அழைத்து வருவதற்கான ஒர சந்தர்ப்பம வழங்கப்பட்டு ஒரு புதிய விதிமுறை திறம்பட அமுல்படுத்தப்பட்டுள்ளது.





- ஓய்வூதிய திகதிக்குள் அலுவலரது ஓய்வூதியச் சலுகைகளைப் பெற்றுக்கொடுக்கும் குறிக்கோளுடன், அலுவலர்கள் ஓய்வுபெறும் திகதியை அடையும் போது குறுந்தகவல் மூலம் ஓய்வூதியம் தொடர்பாக அலுவலர்களுக்கு அறிந்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொது சேவையில் ஏறத்தாள அறுநூறாயிரம் அலுவலர்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பதிவு முறைமையின் கீழ் பதிவு செய்துள்ளதால், இழைப்பாறுவதற்கு தயார்படுத்த அவர்களின் தனிப்பட்ட கோப்புக்களை இற்றைப்படுத்த முறைமையின் தகவல்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, ஓய்வூதிய திகதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர், இச் செயல்பாடு மிகவும் அவசியமானது.



- ஓய்வூதியர்களின் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் முகமாக, தரவு பரிமாற்றத்திற்காக தேர்தல் திணைக்களத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன் இணைய தளத்தின் மூலம் ஓய்வூதிய முகாமைத்துவ தரவு தளத்துடன் ஒர் இணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் வழியில் ஒரு அரசு அலுவலரி ஓய்வுபெறும் நேரத்தில் அவரது வதிவிட விவரங்களை சரிபார்க்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- யுத்தகாலத்தில் யுத்தம் நடைபெற்ற பகுதி மற்றும் அதற்கு அப்பாலான பகுதிகளில் கடமையில் ஈடுபட்டிருக்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளின் காரணமாக இறந்தவர்கள் அல்லது ஊனமுற்ற முப்படைகள் மற்றும் இலங்கை காவல்துறை உறுப்பினர்களுக்கான மற்றும் அவர்களில் தங்கிவாழ்வோர் மற்றும் ஊனமுற்றோர் அவர்கள் வாழும் காலம் வரை அவர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தகவல்களைச் உள்ளடக்கி ஒரு இயங்கலை முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ஓய்வூதியர் ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவராக இருக்கும் சந்தர்ப்பத்திலும் அவர் நேரடியாக சமூகம் தந்து தனது நன்மைகளை பெற்றுக்கொள்ளும் நிலையில் இல்லாத சந்தர்ப்பத்தில், அத்தகைய ஓய்வூதியர் தனக்கான ஒர் அறங்காவலரை நியமிப்பதன் மூலம் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான செயற்பாடு 07/2020 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ஓய்வூதிய விண்ணப்பம் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை முழுமையாக இயங்கலையில் சமர்ப்பிப்பதற்கான வழியை வழங்குவதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ அமைப்பு புதுப்பிக்கப்பட்டுள்ளது.



- ஓய்வில் அனுப்பப்படும் அலுவலர்களின் நன்மைகளை உறுதிசெய்யும் நோக்கில், 03/2020 ஆம் இலக்க 2020.12.31 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டதுடன் அச் சுற்றறிக்கையில் அவர்களின் மொத்த சேவை காலத்தில் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் நிதிக்கு மேற்கொண்ட பங்களிப்புகளை மீட்டெடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பான வழிகாட்டுதல்களுமது தொடர்பில் அறிக்கையிடல் மற்றும் அந்த விவரங்களை தனிப்பட்ட கோவையில் சேர்ப்பது போன்ற விடயங்களும் உள்ளடக்கி வெளியிடப்பட்டது.

- எதிர்காலத்தில் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய சமூக பாதுகாப்பு முறைகள் மற்றும் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்தல் தொடர்பிலான முக்கியமான தகவல்களை உள்ளடக்கிய் "தலைமுறையின் பெருமை" என்ற தலைப்பில் தினமினா, மற்றும் தினகாரன் பத்திரிகைகளுடன் இணைந்து ஒரு மேலதிக இணைப்பாக ஓய்வூதியத் திணைகளத்தின் பொன் விழாவையும் ஓய்வூதியர் தின விழா கொண்டாட்டத்தையும் ஒட்டி "இலங்கை ஓய்வூதியம்" எனும் புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வு கௌரவ பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரது அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டது.



**"இலங்கை ஓய்வூதியம்" எனும் புத்தகம் வெளியிடல்**



**"தலைமுறையின் பெருமை" பத்திரிகைகளுடன் மேலதிக இணைப்பாக வெளியிடல்**

- ஓய்வூதியத் திணைக்களத்தால் 50 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் தபால் திணைக்களத்துடன் இணைந்து பொன்விழாவைக் கொண்டாட அஞ்சல் முத்திரையுடன் முதல் நாள் தபால் உறை ஆகியவை வழங்கப்பட்டது.




**போன் விழா அஞ்சல் முத்திரை**



**போன் விழா முதல் நாள் தபால் உறை**



**முதல் போன் விழா அஞ்சல் முத்திரை மற்றும் அஞ்சல் உறை வெளியிடல்**

- “அனைவருக்கும் ஓய்வூதியம்“ என்ற கருப்பொருளின் கீழ் சமூக பாதுகாப்புக்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் திட்டங்களின் தொகுப்பைத் ஆரம்பித்தல்.

இலங்கையின் தற்போதைய சமூக பாதுகாப்பு முறைமையிலும் ஓய்வூதிய திட்டங்களை மேம்படுத்துவதிலும் “செழிப்பு மற்றும் அற்புத நோக்கு” என்ற கொள்கை அறிவிப்பில் பல முக்கிய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கை அறிவிப்பின் மூலம், தனியார் துறையின் ஊழியர்கள் மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்கள் உட்பட நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் பொது மற்றும் தனியார் துறைகளில் ஓய்வுபெறும் வயதை விஞ்ஞான அடிப்படையில் நிர்ணயித்து ஓய்வூதிய திட்டங்களை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளதுடன் தற்போதுள்ள அரசு ஊழியர்களின் ஓய்வூதிய திட்டத்தையும் பாதுகாக் நடவடிக்கை எடுக்கப்படு.

**01**

**ஓய்வு பெறும் வயதெல்லையை 63 வயது வரை நீட்டித்தல்**

முன்மொழிவுச் சுருக்கம் 01

**02**

**அரசு ஊழியர்களின் ஓய்வூதிய திட்டத்தை பாதுகாத்தல்**

- விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய நிதியை ஸ்தாபித்தல்.
- ஓய்வூதியத்திற்கு ஏற்புடைய ஒரு நிதிப பங்களிப்பை உறுதி செய்தல்.
- குறைந்தபட்ச சேவைக் காலத்தை நீட்டித்தல்.
- ஓய்வூதியத்தை அதிகரிப்பதற்கான ஒரு சூத்திரத்தை அறிமுகப்படுத்துதல்.
- ஓய்வூதிய பிரமாணக் குறிப்பில் உள்ள சிக்கல்களை நீக்குதல்.

முன்மொழிவுச் சுருக்கம் 02

**03**

**தனியார்துறையினருக்கான ஓய்வூதிய திட்டம்**

- ஊழியர் வருங்கால வைப்பு நிதியின் நிலுவைத் தொகையின் முழு அல்லது பகுதியளவை முதலீடு செய்வதன் மூலம் அரசாங்க ஓய்வூதியத்தைப் பெறுதல்.
- பொது சேவை துறையினருக்கும் தனியார் துறையினருக்கும் வழங்கப்படும் சமூக பாதுகாப்பு சலுகைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் குறைத்தல்.

முன்மொழிவு சுருக்கம் 03

**04**

**அனைவருக்கும் ஓய்வூதியம்**

- அனைவருக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை உறுதி செய்து ஓய்வூதியத்தை வழங்குதல்.
- இந்த நோக்கத்திற்காக ஒரு சமூக பாதுகாப்பு வரியை அறிமுகப்படுத்துதல்.

முன்மொழிவுச் சுருக்கம் 04

## 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்

| | வெளியிடப்பட்ட திகதி | சுற்றிக்கை இலக்கம் | விடயம் |
|---|---|---|---|
| 1 | 2020.01.08 | 1/2020 | ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களின் மீள்வேலைவாய்ப்பு மற்றும் ஓய்வூதிய திருத்தம் |
| 2 | 2020.01.21 | 2/2020 | கைரேகைகள் மூலம் ஓய்வூதியர்களின் உயிர் சான்றிதழை உறுதிப்படுத்தல் - முன்னோடித் திட்டம் |
| 3 | 2020.02.10 | 2/2020(I) | கைரேகைகள் மூலம் ஓய்வூதியர்களின் உயிர் சான்றிதழை உறுதிப்படுத்தல் - முன்னோடித் திட்டம் |
| 4 | 2020.02.25 | 3/2020 | விதவைகள்/ தபுதாரர்/ அனாதைகள் அல்லது ஊனமுற்ற ஓய்வூதியத்திற்கான விண்ணப்பத்தை இயங்கலையில் சமர்ப்பித்தல் |
| 5 | 2020.04.02 | 4/2020 | இழைப்பாற்றப்படாத ஓய்வூதியம் பெறவேண்டிய ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆனால் கோவிட்-19 காரணமாக இயங்கலையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத ஓய்வூதியர்களுக்கான நிவாரணம் வழங்கல். |
| 6 | 2020.04.06 | 4/2020(i) | இழைப்பாற்றப்படாத ஓய்வூதியம் பெறவேண்டிய ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆனால் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக இயங்கலையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத ஓய்வூதியர்களுக்கான நிவாரணம் வழங்கல். |
| 7 | 2020.04.20 | 4/2020(ii) | இழைப்பாற்றப்படாத ஓய்வூதியம் பெறவேண்டிய ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆனால் கோவிட்-19 காரணமாக இயங்கலையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத ஓய்வூதியர்களுக்கான நிவாரணம் வழங்கல். |
| 8 | 2020.04.29 | 4/2020(iii) | இழைப்பாற்றப்படாத ஓய்வூதியம் பெறவேண்டிய ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆனால் கோவிட்-19 காரணமாக இயங்கலையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத ஓய்வூதியர்களுக்கான நிவாரணம் வழங்கல். |
| 9 | 2020.05.22 | 4/2020(iv) | இழைப்பாற்றப்படாத ஓய்வூதியம் பெறவேண்டிய ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆனால் கோவிட்-19 காரணமாக இயங்கலையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத ஓய்வூதியர்களுக்கான நிவாரணம் வழங்கல். |
| 10 | 2020.04.20 | 5/2020 | உலகளாவிய கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக வீட்டிலிருந்து வேலை செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் பொது சேவைகளை வழங்குதல் (WFH) |
| 11 | 2020.06.09 | 6/2020 | உலகளாவிய கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக வீட்டிலிருந்து வேலை செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் பொது சேவைகளை வழங்குதல் (WFH) |

| | | | |
|---|---|---|---|
| 12 | 2020.06.11 | 7/2020 | ஓய்வூதியம் பெறுபவர் தனது ஓய்வூதியத்தைப் பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்ளும் போதெல்லாம் ஒரு பாதுகாவலரை நியமிப்பதற்கான ஒப்பந்தம் |
| 13 | 2020.06.11 | 8/2020 | ஓய்வூதியர்கள் சமூகத்தை மேம்படுத்துவதற்காக கடன் வசதிகளை வழங்குவதை வலுப்படுத்துதல் |
| 14 | 2020.09.22 | 2/2020 (ii) | கைரேகைகள் மூலம் ஓய்வூதியர்களின் உயிர்வாழ் சான்றிதழை சரிபார்த்தல் - முன்னோடித் திட்டம் |
| 15 | 2020.07.30 | 2/2017 (i) | பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பங்களிப்புகளின் விவரங்களை இணையம் மூலம் இற்றைப்படுத்தல் |
| 16 | 2020.09.22 | 2/2020 (iii) | கைரேகைகள் மூலம் ஓய்வூதியர்களின் உயிர்வாழ் சான்றிதழை சரிபார்த்தல் - முன்னோடித் திட்டம் |
| 17 | 2020.11.30 | 3/2015 (iv) | ஓய்வூதிய திகதியில் ஓய்வூதிய நலன்களைப் பெறுதல். (ஓய்வூதிய விண்ணப்பங்களை இயங்கலையில் சமர்ப்பித்தல்) |
| 18 | 2020.12.02 | 1/2009 (i) | ஊனமுற்றோர் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் செலுத்துதல் |
| 19 | 2020.12.05 | 9/2020 | 2021 ஆண்டு ஓய்வூதிய கொடுப்பனவுகள் |
| 20 | 2020.12.08 | 10/2020 | துணை கடன் திட்டம் |

## 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக் கடிதங்கள்கள்

| | வெளியிடப்பட்ட திகதி | சுற்றிக்கை கடித இலக்கம் | விடயம் |
|---|---|---|---|
| 01 | 2020.06.17 | 01/2020 | ஓய்வு பெறும் ஆயுத சேவைகளில் உள்ள அலுவலர்களின் சேவை ஓய்வூதியத்தை திருத்துவதற்கான செயல்முறையை ஒழுங்குபடுத்தல் |
| 02 | 2020.07.13 | 02/2020 | ஓய்வூதியர்களின் விவரங்களை வெளி தரப்பினருக்கு வழங்குவதை கட்டுப்படுத்துதல் |
| 03 | 2020.12.03 | විවෑ/දි.ස/ජී.ස/2021 | ஓய்வூதியர்களது வதிவிடச் சான்றிதழ்கள் 2021. |
| 04 | 2020.11.23 | PEN/ADG/2020/DS | ஓய்வூதிய கோவைகள் அற்ற ஓய்வூதியர்களது ஓய்வூதியத் திருத்தம் |
| 05 | 2020.12.21 | 12/2020 | இரண்டு வருடங்களுக்கும் மேலாக வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களிற்கு 2021 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்குதல் |
| 06 | 2020.12.21 | PEN/POL/1A/special | துணை விழா கடன் திட்டம் - வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள் |


## 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அறிக்கை


### சட்டப் பிரிவு

| கோப்புகள் மற்றும் எழுத்துக்களின் வகை | எண்ணிக்கை | வழங்கப்பட்ட அவதானிப்புகளின் எண்ணிக்கை | ஆலோசனையில் பங்கேற்ற நபர்களின் எண்ணிக்கை | முடிக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| மனித உரிமைகள் தொடர்பான புகார்கள் | 46 | 46 | - | - |
| மனித உரிமைகள் தொடர்பான அழைப்பாணை | 20 | 20 | 20 | 05 |
| ஓம்புட்ஸ்மன் தொடர்பான புகார்கள் | 102 | 100 | - | 02 |
| ஏனைய கடிதங்கள் | 50 | 50 | - | - |
| உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 04 | 04 | - | 03 வழக்குகளுக்கு தீர்ப்புகள் வழங்கப்படவில்லை |
| உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 06 | 03 | 03 | தீர்ப்புகள் வழங்கப்படவில்லை |
| மாகாண உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 02 | 02 | 01 | தீர்ப்புகள் வழங்கப்படவில்லை |
| சுட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்களுக்காக அனுப்பப்பட்ட கோப்புகள் | 06 | - | - | - |
| நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள் | 05 | - | - | - |
| அவதானிப்புகளுக்காக ஏனைய பிரிவுகளிலிருந்து குறிப்பிடப்படும் கோவைகள் | 28 | 28 | - | - |
| **மோத்தம்** | **269** | **253** | **24** | |

மேற்கூறிய விடயங்களுக்கு இணங்க நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான சந்திப்பில் வழங்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் பங்கேற்ற ஆலோசனைகள் ஏறத்தாள 260 ஆகும், மேலும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் 11 ஆகும்.

## 2020 ஆம் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்பட்ட மாதாந்த ஓய்வூதியச் சுருக்கம்




## ஓய்வூதியத் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டில் ஓய்வூதியங்களில்ச் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள்

2020 ஆம

ஆண்டில் தனிப்பட்ட தகவல்களைப் இற்றைப்படுத்தல்
**23,955**

திருத்தங்களின் மீள் கணக்கீடு
**749**

இராணுவத்தின் ஊனமுற்ற கொடுப்பனவு
**905**

ஓய்வுக்குப் பின்னரான ஓய்வூதிய மாற்றங்கள
**2,983**

இராணுவத்தில் ஊனமுற்ற பிரிவின் கீழ் 55 வயதை நிறைவு செய்தல்
**277**

ஏனைய நிலுவைகள் மற்றும் திருத்தங்களை செலுத்துதல
**3,146**

தரவு கிடைக்காமையால் தாமதமான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை செலுத்துதல்,.
**271**

அரசியல் வன்முறைகளைக் கருத்தில் கொண்டு ஓய்வூதியத்தை திருத்துதல
**267**

**2020 ஆம் ஆண்டில் மாதாந்தம் செலுத்தப்பட்ட சிவில், ஆயுதப்படைகள் மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய எண்ணிக்கை.**

| முதம் | சேயற்படு நிலை ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | குடியியல் மற்றும் ஆயுதபபடை | விதவைகள் மற்றஜம் அனாதைகள் | மொத்தம் |
| தை | 456,499 | 183,803 | 640,302 |
| மாசி | 457,689 | 183,827 | 641,516 |
| பங்குனி | 459,308 | 184,108 | 643,416 |
| சித்திரை | 461,034 | 184,145 | 645,179 |
| வைகாசி | 460,851 | 184,052 | 644,903 |
| ஆனி | 460,978 | 183,674 | 644,652 |
| ஆடி | 461,255 | 183,953 | 645,208 |
| ஆவணி | 464,715 | 184,472 | 649,187 |
| புரட்டாதி | 466,398 | 184,722 | 651,120 |
| ஐப்பசி | 468,214 | 184,746 | 652,960 |
| கார்த்திகை | 474,369 | 184,797 | 659,166 |
| மார்கழி | 475,889 | 185,045 | 660,934 |

**2020 ஆம் ஆண்டில் புதிதாகச் ஆரம்பிக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தின் எண்ணிக்கையும் அதற்காக செலுத்தப்பட்ட தொகையும்.**

| மாதம் | குடியியல் | | விதவைகள் மற்றஜம் அனாதைகள் | | ஆயுதபபடை | |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) |
| தை | 741 | 123,607,248 | 652 | 114,815,872 | 456 | 102,960,149 |
| மாசி | 1,456 | 278,582,765 | 781 | 145,532,883 | 998 | 270,442,847 |
| பங்குனி | 1,520 | 299,656,311 | 866 | 181,905,044 | 958 | 242,808,123 |
| சித்திரை | 1,536 | 63,400,389 | 405 | 11,484,135 | 778 | 37,862,158 |
| வைகாசி | 519 | 99,309,464 | 384 | 58,444,848 | 109 | 37,539,096 |
| ஆனி | 659 | 136,270,138 | 287 | 55,884,845 | 498 | 115,621,097 |
| ஆடி | 851 | 236,600,311 | 839 | 195,502,312 | 657 | 215,206,143 |
| ஆவணி | 2,965 | 843,325,138 | 1080 | 212,385,780 | 1585 | 548,120,242 |
| புரட்டாதி | 1,461 | 294,404,053 | 841 | 176,479,702 | 1111 | 266,512,894 |
| ஐப்பசி | 1,924 | 506,934,716 | 648 | 151,113,354 | 869 | 251,051,492 |
| கார்த்திகை | 5,913 | 738,573,125 | 585 | 96,785,722 | 1506 | 359,759,175 |
| மார்கழி | 1,704 | 201,165,605 | 750 | 174,669,967 | 832 | 205,888,678 |
| **மோத்தம்** | **21,249** | **3,821,829,263** | **8,118** | **1,575,004,464** | **10,357** | **2,653,772,092** |

## ஓய்வூதியத்திற்கான வருடாந்தச் செலவீனம்

| ஆண்டு | செலவீனம ரூ.மில் |
|---|---|
| 2016 | 164,028,280,464.60 |
| 2017 | 172,709,060,986.55 |
| 2018 | 182,014,784,493.07 |
| 2019 | 202,642,744,941.95 |
| 2020 | 229,080,763,894.39 |

## 2020 ஆம் அண்டில் சேவையில் இருக்கும் பொது மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற முப்படை அங்கத்தவர்கள், காவல்துறையினர் ஆகியோருக்கு செலுத்தப்பட்ட இழப்பீட்டு சம்பளம், மற்றும் கொடுப்பனவுகள்

| நிறுவனம் | 2020 ஆம் ஆண்டு மார்கழி வரை | |
|---|---|---|
| | தொகை | கொடுப்பனவு செய்த தொகை ரூ.மில் |
| தரைப்படை | 36,814 | 33.36 |
| கடற்படை | 1,469 | 1.37 |
| வான்படை | 578 | 0.57 |
| காவல்துறை | 2,043 | 2.16 |
| **மொத்தம்** | **40,904** | **37.46** |

## பணிக்கொடை கொடுப்பனவு 2020

| பணிக்கொடை வகை | கொடுப்பனவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்த தொகை ரூ.மில் |
|---|---|---|
| குடியியல், ஆயுதப்படை, மையப்படுத்தப்பட்ட | 25,520 | 27,408,501,019 |
| ஆயுதப்படை | 29 | 5,057,963 |
| இறப்பு | 1103 | 632,808,553 |
| மீளாய்வு | 3105 | 156,868,686 |
| வேறு * | 1,333 | 803,014,264 |
| **மொத்தம்** | **31,090** | **29,006,250,484** |

* சிறப்பு இழப்பீடு, சேவை இழப்பீடு, சேவை பணிக்கொடை, சேவை பணிக்கொடை- இறப்பு, (17), மீள்-வேலைவாய்ப்பு மீதான பணிக்கொடை கொடுப்பனவுகள்

## விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தின் நன்மைகளை செலுத்துதல் - 2020

| மாதம் | விதவைக் ஓய்வூதியம் | அனாதைகள் ஓய்வூதியம் | ஊனமுற்றோர் ஓய்வூதியம் | வேறு |
|---|---|---|---|---|
| தை | 572 | 32 | 24 | 24 |
| மாசி | 722 | 16 | 16 | 27 |
| பங்குனி | 743 | 50 | 35 | 38 |
| சித்திரை | 385 | 12 | 3 | 5 |
| வைகாசி | 347 | 13 | 17 | 7 |
| ஆனி | 235 | 18 | 5 | 29 |
| ஆடி | 723 | 48 | 17 | 51 |
| ஆவணி | 945 | 39 | 34 | 62 |
| புரட்டாதி | 747 | 35 | 32 | 27 |
| ஐப்பசி | 543 | 44 | 35 | 26 |
| கார்த்திகை | 553 | 18 | 1 | 13 |
| மார்கழி | 646 | 50 | 22 | 32 |
| **மொத்தம்** | **7,161** | **375** | **241** | **341** |

## விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய திட்டத்தில் பதிவு செய்தல்

- 2020 ஆம் ஆண்டில் விதவைகள்/ விதவைகள் மற்றும் ஓய்வூதிய திட்டத்தில் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 29513 விண்ணப்பங்களுக்கு விதவைகள்/ விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான உறுப்பினர் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## திருப்பிச் சேலுத்தப்பட்ட விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கான அளித்த பங்களிப்புகள் - 2020

| | குடியியல் | ஆயுதப்படை | பொது 29 |
|---|---|---|---|
| 2019.12.31 ஆம் திகிய மீதி | 197 | 0 | 388 |
| விண்ணப்பங்களின் ரசீது | 1472 | 983 | 29 |
| விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் | 914 | 973 | 31 |
| திருப்பியனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் | 468 | 10 | 281 |
| 2020.12.31 ஆம் திகிய மீதி | **287** | **0** | **105** |

**ஆயுதப்படை பிரிவில் இருந்து மத்திய தரவு தளத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஓய்வூதியங்களின் எண்ணிக்கை**

| ஓய்வூதிய வகை | கொடுப்பனவுகளின் எண்ணிக்கை (தரைப்படை/வான் படை/ கடல்ப்படை) |
|---|---|
| சேவை ஓய்வூதியக் கொடுப்பனவு (10/ 12 க்கு கீழ்) | 353 |
| ஊனமுற்ற ஓய்வூதிய முதல் கொடுப்பனவு | 778 |
| ஆயுதப்படைகளின் திருத்தங்கள் | 2101 |
| திருத்தங்கள் | 346 |
| முரணப் பணிக்கொடை | 135 |
| சேவைப் பணிக்கொடை | 980 |
| உயிர்வாழ்வு கொடுப்பனவு | 207 |
| திருத்தங்கள் (10/12 க்கு கீழே) | 103 |

**ஓய்வூதியம் வழங்கப்பட்ட வெளிநாட்டில் தங்கியுள்ள ஓய்வூதியதாரர்களின் விவரங்கள்**

| மாதம் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கொடுப்பனவு (ரூ.) |
|---|---|---|
| தை | 9780 | 250,090,365 |
| மாசி | 9815 | 244,680,271 |
| பங்குனி | 9845 | 302,211,723 |
| சித்திரை | 9855 | 225,587,117 |
| வைகாசி | 9869 | 309,333,207 |
| ஆனி | 9870 | 256,158,297 |
| ஆடி | 9869 | 305,759,867 |
| ஆவணி | 9881 | 261,062,289 |
| புரட்டாதி | 9880 | 442,883,616 |
| ஐப்பசி | 9857 | 308,134,677 |
| கார்த்திகை | 9872 | 264,001,770 |
| மார்கழி | 9865 | 264,248,148 |
| **மொத்தம்** | | **3,434,151,347** |

## பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியத்தின் பெறுகைகளும் கொடுப்பனவுகளும் (8%+12%) - 2020

| மாதம் | பெறுகைகள் (ரூ.) | கொடுப்பனவுகள் (ரூ.) |
|---|---|---|
| தை | 77,355,694 | 33,971,631 |
| மாசி | 71,472,673 | 23,099,709 |
| பங்குனி | 30,360,619 | 31,988,316 |
| சித்திரை | 7,410,912 | 3,027,355 |
| வைகாசி | 44,858,950 | 19,336,686 |
| ஆனி | 76,308,381 | 24,767,386 |
| ஆடி | 213,487,273 | 19,421,915 |
| ஆவணி | 80,342,063 | 29,346,143 |
| புரட்டாதி | 132,460,293 | 58,190,680 |
| ஐப்பசி | 40,056,422 | 35,506,612 |
| கார்த்திகை | 13,138,810 | 18,188,702 |
| மார்கழி | 61,457,155 | 45,170,288 |
| **மொத்தம்** | **848,709,245** | **342,015,423** |

## உறுப்பினர் பகுப்பாய்வு

| மாதம் | அகற்றப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை | புதிதாக இணைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தை | 793 | 728 |
| மாசி | 450 | 732 |
| பங்குனி | 141 | 1,083 |
| சித்திரை | 84 | 76 |
| வைகாசி | 111 | 232 |
| ஆனி | 219 | 1,142 |
| ஆடி | 303 | 472 |
| ஆவணி | 400 | 773 |
| புரட்டாதி | 452 | 1,084 |
| ஐப்பசி | 129 | 763 |
| கார்த்திகை | 214 | 581 |
| மார்கழி | 285 | 460 |
| **மொத்தம்** | **3,581** | **8,126** |

| | | |
|---|---|---|
| 2019.12.31 ஆம் திகதியன்றான அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | 231,339 |
| கூட்டுக – புதிதாக இணைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | 8126 |
| | | 239,465 |
| கழிக் புதிதாக இணைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | 3,581 |
| 2020.12.31 ஆம் திகதியன்றான அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | **235,884** |

## பௌதீக முன்னேற்றம்

திணைக்கள அலுவலர்களிடமிருந்து அதிக வினைத்திறனுள்ள உற்பத்தி சேவையைப் பெறும் நோக்கில், அலுவலக வளாகங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன, அலுவலர்கள் தமது சேவைகளை திருப்திகரமாக வழங்குவதற்காக கவர்ச்சிகரமானதும் பொருத்தமானதுமான அலுவலகச் சூழலை இக்கட்டடத் தொகுதி கொண்டுள்ளது.

இச் செயல்முறையின் கீழ் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

- திணைக்களத்தின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக்கிளை மற்றும் திணைக்களத்தின் உள் படிக்கட்டுகள் ஆகியவற்றிற்கு நிறச்சாந்து பூசப்பட்டது.
- 4 வது மாடியின் கொடுப்பனவு பிரிவை மற்றும் ஓட்டுநர்களின் காத்திருப்பு அறை ஆகியவை குளிரூட்டப்பட்டுள்ளன.
- சாப்பிடும் அறைக்கு அருகே நிறுவப்பட்டிருக்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் திறந்த பகுதியை உள்ளடக்கி வேலி அமைத்தல்.
- திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்யும் திணைக்களத்தின் கண்காணிப்பு அறையை சரிசெய்தல்.
- அனுராதபுரத்தின் நுவரகம்பலத்து பிரதேச செயலகம் மற்றும் போர் கிறவற் பிரதேச செயலகம், கங்கவத்த, கோரலே மற்றும் கண்டியின் யட்டிதினுவர ஆகிய பிரதேச செயலகங்களின் ஓய்வூதிய பிரிவுகள் மற்றும் பதிவு அறைகளை மாற்றியமைத்தல்.
- கேலனியா, வேதமுல்ல ஆகிய விடுமுறை விடுதிகளின் இரண்டு மாடி கட்டிடத்திற்கு நிறச்சாந்து பூசுதல் மற்றும் மாற்றியமைத்தல்.

## சவால்கள்

- இந்த காலகட்டத்தில், கோவிட் 19 தொற்றுநோய்க்கு முகங்கொடுத்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தீவு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டதும், திணைக்களம் அமைந்துள்ள பகுதி பூட்டப்பட்டபோதும் தடையின்றி சேவை வழங்குவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை, சுகாதார முன்னெச்சரிக்கை விதிமுறைகளை கடைபிடித்து கடமைக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அலுலர்களே அழைக்கப்பட்டமை.

- 2020 ஆம் ஆண்டின் கிராச்சுட்டிகளை செலுத்துவதற்கு திணைக்களத்திற்கு போதுமான நிதி விதிகள் ஒதுக்கப்படாமை.

## ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்காலத் திட்டங்கள்

- தற்போதுள்ள மொத்த மக்கள்தொகையில் முதியோர் தொகை கிட்டத்தட்ட 12.5% ஆக உள்ளது என்று புள்ளிவிவர கணிப்புகளால் தெரிவிக்கப்படுகிறது, இது 2050 ஆம் ஆண்டில் 24.8% வரை அதிகரிக்கும். எனவே, இந்த சூழ்நிலையை எடுத்துக் கொண்டால், வளமான எதிர்காலத்தில் நன்கு பாதுகாக்கப்பட்ட முதியோர் சமூகத்தை பராமரிப்பதற்கான பொருளாதார நன்மைகளை வழங்கும் நோக்கில் மூன்று கட்சிகளின் பங்களிப்புடன் அதாவது அரசாங்கம், தொழில்முனைவோர் மற்றும் உழைக்கும் மக்கள், நன்கு பாதுகாக்கப்பட்ட முதியோர் சமூகத்தை பராமரிப்பதற்காக, முழு மக்களும் அடங்கலாக அனைவருக்கும் ஓய்வூதியத்தை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பாக, சரியான நேரத்தில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னோடியான துறையாக ஓய்வுதியத் திணைக்களம் இருக்கவேண்டியது எதிர்நோக்கும் சவால்களில் முக்கியமன ஒன்றாகும். அதன்படி, “அனைவருக்கும் ஓய்வூதியம்” எனும் திட்டங்களின் தொகுப்பிற்கு கொள்கை ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

- ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம் ஆகியவை தற்போதைய அனைத்து திருத்தங்களையும் உள்ளடக்கியுள்ளன. அவ்வப்போது அரசாங்கம் எடுக்கும் கொள்கை முடிவுகளின் அடிப்படையில் ஓய்வூதியத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளில் காணப்படும் சில பலவீனங்களைத் தவிர்த்து அந்த சுற்றறிக்கைகளைப் புதுப்பிப்பதற்கான திட்டங்களை சமர்ப்பிக்கவும், சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு செய்ய வேண்டிய மாற்றங்களை அடையாளம் காணவும் அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்கள் காரணமாக ஓய்வூதியம் செலுத்துவதற்கான செயல்பாட்டில் காணப்பட்ட சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக செய்ய வேண்டிய மாற்றங்களை அடையாளம் காணவும், அதே நேரத்தில் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு, கட்டளைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளில் உள்ள குறைபாடுகளைத் தவிர்க்வும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான அஞ்சல் சேவைகளுக்கு பதிலாக மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



**எ. ஜகத் டி. டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

# 3

# 2020.12.31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான நிதி செயல்திறன

# 3.1. நிதி செயல்திறன் அறிக்கை

2020.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- F

(ரூபா)

| பாதீடு 2020 | | குறிப்பு | உண்மை நிலை 2020 | உண்மை நிலை 2019 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 32,417,052,244 | 28,984,852,661 | ஏசீஏ-1 |
| | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | 32,417,052,244 | 28,984,852,661 | |
| | **வருமானம் பெறுகைகள்** | | - | - | |
| | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 252,227,945,841 | 224,191,545,265 | ஏசீஏ-3 |
| | திறைசேரிக்கு மீண்டுவந்த முற்பணங்கள் | | | | |
| | பெற்றுக்கொண்ட தேறிய முற்பணம் | | 252,227,945,841 | 224,191,545,265 | |
| | வைப்புகள் | | 29,377,905 | 8,798,384 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 38,327,396 | 52,205,855 | ஏசீஏ-5 |
| | ஏனைய பெறுகைகள்(8098+8186) | | 64,096,039,447 | 43,437,572,432 | |
| | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **316,391,690,589** | 267,690,121,936 | |
| | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ=(அ)+(ஆ)** | | **348,808,742,833** | 296,674,974,597 | |
| | **கழிக்குக : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 582,650,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 577,026,866 | 516,109,865 | ஏசீஏ–2(ii) |
| 64,550,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 60,630,877 | 72,889,754 | ஏசீஏ–2(ii) |
| 301,207,360,000.00 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 295,303,216,226 | 272,363,007,932 | ஏசீஏ–2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ–2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | | 60,780 | ஏசீஏ–2(ii) |
| **301,854,560,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **295,940,873,969** | 272,952,068,331 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 11,100,000.00 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 8,276,222 | 18,058,221 | ஏசீஏ-2(ii) |
| 5,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 3,562,293 | 9,084,010 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 1,000,000.00 | திறன் அபிவிருத்தி | 14 | 467,478 | 669,170 | ஏசீஏ-2(ii) |
| 8,100,000.00 | பிற மூலதனச் செயவு | 15 | 3,617,212 | 30,816,675 | ஏசீஏ-2(ii) |
| **25,200,000.00** | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **15,923,205** | 58,628,076 | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **63,145,242,254** | **43,326,974,873** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 6,367,853 | 8,621,606 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 45,714,845 | 62,655,715 | ஏசீஏ-5 |
| | | | 63,093,159,556 | 43,255,697,552 | |
| | மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ) | | **359,102,039,428** | **316,337,671,280** | |
| | 2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான முற்பண மீதி ஏ=(இ-எ) | | **(10,293,296,595)** | **(19,662,696,683)** | |

1

## 3.2. நிதி நிலை அறிக்கை

ஏசீஏ -பீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமை அறிக்கை

| | | உண்மை நிலை | |
|---|---|---|---|
| | குறிப்பு | 2020 | 2019 |
| | | ரூபா | ரூபா |
| நிதி அல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,010,864,008.00 | 2,022,113,280.00 |
| நிதி சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 168,558,188.00 | 161,170,739.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | 2,179,422,196.00 | 2,183,284,019.00 |
| தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு | | | |
| தேறிய பெறுமதி | | 137,014,255.00 | 152,636,858.00 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரன ஒதுக்கம் | | 2,010,864,008.00 | 2,022,113,280.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 31,543,933.00 | 8,533,881.00 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 2,179,422,196.00 | 2,183,284,019.00 |

பக்க இலக்கம் 01 முதல் 28 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 29 முதல் 38 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ........................ | ........................ | ........................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
| பெயர்: | பெயர்: | |
| பதவி : | பதவி : | பெயர் : |
| திகதி : 24/02/2021 | திகதி : 24/02/2021. | திகதி : 22/02/2021 |
| J.J. Rathnasiri<br>Secretary<br>Ministry of Public Services, Provincial Councils and Local Government<br>Independence Square<br>Colombo 07 | A. Jagath D. Dias<br>Director General<br>Department of Pensions<br>Colombo 10. | A.D.T.N. ABEYSINGHE<br>Chief Accountant<br>Department of Pensions<br>Maligawatta,<br>Colombo 10. |

## 3.3. காசுப் பாய்ச்சல் அறிக்கை

ஏசிஏ-4

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | உண்மை 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | |
| கட்டணங்கள் தண்டப்பணங்கள் தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | | |
| இலாபம் | | |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 11,208,558,725 | 10,528,144,946 |
| ஏனைய செலவின் தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 64,877,984,185 | 44,020,374,397 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 252,227,945,841 | 224,191,545,265 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 328,314,488,751 | 278,740,064,608 |
| **கழி பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 632,214,140 | 548,991,644 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 253,904,522,847 | 234,875,558,306 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 73,777,979,231 | 43,232,156,011 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணி முற்பணம் | 1,192 | 203 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 328,314,717,410 | 278,656,706,164 |
| தொழிற்பாட்டு செயற்றப்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | (228,659) | 83,358,444 |
| **முதலீட்டு செயற்றப்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | | |
| பங்கு இலாபம் | | |
| பௌதீக சொத்துக்களின் விற்பனை | | |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | | |
| முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | 36,478,300 | 4,337,373 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | 36,478,300 | 4,337,373 |
| **கழி பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| கொள்வனவு அல்லது பௌதீக சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய | | |
| முதலீடுகளின் கொள்வனவு | 14,432,269 | 37,469,355 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 44,827,424 | 50,974,581.00 |
| முதலீட்டு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 59,259,693 | 88,443,936 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (22,781,393) | (84,106,563) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)-(ஊ) | (23,010,052) | (748,119) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூரக் கடன்கள் | | |
| வெளிநாட்டுக்கு கடன்கள் | | |
| பெற்ற நன்கொடைகள் | | |
| கிடைக்கப்பெற்ற வைப்புகள் | 29,377,905 | 6,894,473 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | 29,377,905 | 6,894,473 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| உள்ளூர்க் கடன்கள் மீதான மீளக்க கொடுப்பனவுகள் | | |
| வெளிநாட்டுக்கு கடன்கள் மீதான மீளக்க கொடுப்பனவுகள் | | |
| வைப்புகளின் கொடுப்பனவு | 6,367,853 | 6,146,354 |
| வைப்புகள் ஏனைய கணக்கு | | |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த காசு (ஐ) | 6,367,853 | 6,146,354 |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | 23,010,052 | 748,119 |
| ஜனவரி 1ம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | 0 | |
| டிசம்பர் 31ம் திகதியிலுள்ளவாறான இறுதி காசு மீதி | | |

## 3.4. நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு

**அறிக்கையிடலின் அடிப்படை**

| | |
|---|---|
| 1) | அறிக்கையிடல் காலப்பகுதி |
| | |
| | 2020 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு இந் நிதிஅறிக்கை அறிக்கையிடப்பட்டது. |
| | |
| 2) | கணிப்பீட்டு அடிப்படை |
| | |
| | நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும். |
| | |
| | நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும். |
| | |
| 3) | வருமானத்தை அடையாளங்காணுதல் |
| | |
| | நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியிடக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கள் கிடைக்கக் கூடிய காசின் அடிப்படையில் |
| | |
| 4) | சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு |
| | |
| | சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. |
| | |
| | கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது. |
| | |
| 5) | சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம் |
| | |
| | இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும். |
| | |
| 6) | காசு மற்றும் காசுக்கு சமமானவை |
| | |
| | காசு மற்றும் காசுக்கு சமமானவை 2020 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும். |

## 3.5. வருவாய் சேகரிப்பில் செயல்திறன்

ரூ. , 000

| வருவாய் குறியீடு | வருவாய் குறியீட்டின் விபரம் | வருவாய் மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருவாய் | |
|---|---|---|---|---|---|
| | | முதலாம் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ) | மதிப்பீட்டின் சதவீதமாக இறுதி வருவாய் |
| | **சமூக பாதுகாப்புக்கான பங்களிப்புகள்** | | | | |
| 2004.1 | மத்திய அரசாங்கம் | 19,000,000 | 21,000,000 | 21,394,268 | 101.87% |
| 2004.2 | மாகாண சபைகள் | 11,700,000 | 12,000,000 | 11,022,784 | 91.86% |
| 8186 | ஆசிரியர்களுக்கான விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியம் | 104,000 | 104,000 | 263,356 | 253% |
| 2002.01.01 | வாடகை மூலமான வருவாய் | 36,832 | 35,708 | 16,266 | 54.45% |
| | **உள்ளூராட்சி நிதியம்** | | | | |
| - | உள்ளூராட்சி சேவைகளுக்கான விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியம் | - | - | 4 | - |
| - | விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியம் | - | - | 145 | - |
| - | உள்ளூராட்சி சேவைகளுக்கான ஓய்வூதிய நிதியம் | - | - | 75,241 | - |

## 3.6. ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கான பயன்பாட்டின் செயல்திறன

ரூ. ,000

| ஏற்பாட்டின் வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு | | உண்மையான செலவீனம் | முழுமையாகச் செலவிடப்பட்ட ஏற்பாடுகளின் சதவீதமாக பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | முதலாவது ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| மீண்டுவரும் | 301,857,860 | 301,857,860 | 295,940,873 | 98% |
| மூலதனம் | 25,200 | 25,200 | 15,923 | 63% |

## 3.7. நி.ஏ.208 இற்கமைவாக இத் திணைக்களம்/ மாவட்டச் செயலகம்/ ஏனைய அமைச்சுக்களின் ஒரு பிரதிநிதியாக உள்ள மாகாணசபைகள்/திணைக்களங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

ரூ. ,000

| தொ. இல | அமைச்சு/ திணைக்களத்திலிருந்து செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் | ஏற்பாட்டின் குறிக்கோள் | ஏற்பாடுகள் | | உண்மையான செலவீனம் | செலவிடப்பட்ட நிதி ஏற்பாடுகளின் சதவீதமாக பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | முதலாவது ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| 01 | தேர்தல் ஆணைக் குழு (20) | தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவு வழங்குவதற்காக | 1080 | 1080 | 1080 | 100% |
| 02 | திறைசேரிகள் செயற்பாட்டுத் திணைக்களம் (249) | பணிக்கொடை, கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்கு | 10,686,633 | 10,686,633 | 10,686,633 | 100% |

## 3.8. நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயல்திறன

ரூ. ,000

| சொத்துக் குறியீடு | குறியீட்டின் விபரம் | கணிப்பீட்டுச்சபை (Board of Survey ) அறிக்கைக்கமைய 2020.12.31 ஆன்றான மீதி | நிதி நிலை அறிக்கைக்கமைய 2020.12.31 ஆன்றான மீதி | சரியான நேரத்தில் கணக்கிடப்பட வேண்டும் | முன்னேற்றத்தை ஒரு சதவீதமாகப் அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் பொருட்கள் | 581,259 | 581,259 | - | 100% |
| 9152 | இயந்திராதிகள் | 228,197 | 228,197 | - | 100% |
| 9153 | நிலம் | 1,198,405 | 1,198,405 | - | 100% |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துகளை | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடந்து கொண்டிருக்கின்ற பணிகள் | - | - | - | - |
| 9180 | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துகள் | - | - | - | - |

## 3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

எனது.இல. எல்.ஈ.டபிள்யு/டி/டிஓபி/02/50(1) 2021 யூலை 30

பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவிற்கமைய 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

**1. நிதிநிலை அறிக்கைகள்**

**1.1. தகுதிவாய்ந்த அபிப்பிராயம்**

2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருந்த நிதி நிலை அறிக்கை மற்றும் நிதி செயல்திறன் அறிக்கை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான பணப் பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய, 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிநிலை அறிக்கைகளிற்கான கணக்காய்வு, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் பிரிவன் விதிகளிற்கமைய எனது வழிகாட்டுதலின் கீழ், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைய மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் அடிப்படையில் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில் எனது கருத்துகளும் அவதானிப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் பிரிவன் விதிகளிற்கமைய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைய எனது அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

என் கருத்துப்படி, 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்றான நிதிநிலை அறிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதி நிலை குறித்த உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குவதுடன், இவ்வாண்டிற்கான அதன் நிதி செயல்திறன் மற்றும் அதன் பணப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்ப நடைபெற்றுள்ளது.

**1.2. தகுதிவாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) ஏற்ப எனது கணக்காய்வை நடத்தினேன். எனது அறிக்கையின் நிதி அறிக்கைகள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளர் பொறுப்புகளின் அந்த தரங்களின் கீழ் எனது பொறுப்புகள் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எனது தகுதிவாய்ந்த கருத்துக்களுக்கான அடிப்படையை வழங்க போதுமானதும் பொருத்தமானதும் என்று நான் நம்புகிறேன்.

**1.3. நிதிநிலை அறிக்கைகளுக்கான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பது

கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாவதுடன், நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது முகாமைத்துவம் தீர்மானிப்பது போன்ற அவசியமான உள்ளக கட்டுப்பாட்டுடன் மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருள் தவறான விளக்கங்கள் அற்ற நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பது அவசியமாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஓய்வூதியத் திணைக்களம் அதன் வருவாய், செலவுகள், சொத்துகள் மற்றும் பொறுப்புகளை முறையாக பராமரிக்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஒரு உள்ளக உற்பத்தித்திறன் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுவதையும் அது பராமரிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதுடன் மேலும் தேவையான மாற்றங்களை அவ்வப்போது அவ் முறைமையின் உற்பத்தித்திறனை மதிப்பாய்வு செய்து அதை பராமரிப்பையும் கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

### 1.4. நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கைகள் மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருள் தவறாக இல்லாதவாறு , நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காயவு அறிக்கையை வெளியிடுவதும் எனது குறிக்கோள்கள் அகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப நடத்தப்படும் கணக்காய்வு எப்போதுமே ஒரு பொருள் தவறாக இருப்பதை கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. மோசடி அல்லது பிழையிலிருந்து தவறான கருத்துக்கள் எழலாம் என்பதுடன் இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் தனிப்பட்ட முறையில் அல்லது மொத்தமாக அவை நியாயமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் தொழில்முறை தீர்ப்பைப் பயன்படுத்துகிறேன் என்பதுடன் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சந்தேகத்தை கொண்டிருக்கிறேன். எனக்கும் கூட:

- நிதி அறிக்கைகளின் பொருள் தவறான அறிக்கையின் அபாயங்களை அடையாளம் கண்டு மதிப்பிடுதல், மோசடி அல்லது பிழை காரணமாக இருந்தாலும், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை சான்றுகளைப் பெறுதல். மோசடியின் விளைவாக ஏற்படும் ஒரு தவறான தகவலைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாக உள்ளது, ஏனெனில் மோசடி கூட்டு, போலி, வேண்டுமென்றே விடுபடுதல், தவறாகப் பிரதிபலித்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

- சூழ்நிலைகளிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுக்கு உட்பட்ட உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுதல், ஆனால் நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் ஏற்புடைய தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்பாடுகள் உட்பட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்தலும் நிதி அறிக்கைகள் நியாயமான விளக்கக்காட்சியை அடையும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யதலும்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளனவா என்பது அடங்கலாக மற்றய விடயங்களில், குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்தும் நான் கணக்கீட்டு அலுவலருடன் தொடர்பு கொள்கிறேன்.

### 1.5. பிற சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) ஆம் பிரிவின் படி பின்வரும் விடயங்களை நான் இதன்மூலம் கூறுகிறேன்.

- வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் முந்தைய வருடத்துடன் ஒத்துப்போகின்றன.
- முந்தைய ஆண்டு தொடர்பான நிதிநிலை அறிக்கையில் பந்திகள் 2.1 (a), (b), (c), (e), 2.3, 2.5 ஆகியவை குறித்து நான் செய்த பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை.

### 1.6 . நிதிநிலை அறிக்கைகள் பற்றிய கருத்துகள்

### 1.6.1. நிதி செயல்திறன் அறிக்கை

### 1.6.1.1. வருமானம் இல்லாத பற்றுச்சீட்டுகள்கள்

குறியீடு 04 இன் கீழ் பிற நிறுவனங்களுக்கான மதிப்பாய்வில் இவ்வாண்டு திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் மதிப்பு ரூ.1,024,621,786, இது நிதி செயல்திறன் அறிக்கையில் வருமானமற்ற பற்றுச் சீட்டுக்களின் கீழ் மற்ற பற்றுச்சிட்டுகளாகக் காட்டப்படவில்லை. எனவே நிதி செயல்திறன் அறிக்கையில் உள்ள மொத்த பற்றுச்சிட்டுகளின் மதிப்பு அந்தத் தொகையால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1.6.1.2 நடைமுறைக் கணக்கு

அவ் வருடத்திற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணங்களுக்கான செலவீனம் ரூ .2,397,956 மற்றைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவின் கீழ் நிதி செயல்திறன் அறிக்கையில் காட்டப்பட வேண்டும், இது சம்பளம், கூலி மற்றும் ஊழியர்களுக்கான பிற சலுகைகளுக்கான செலவின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஊழியர்களுக்கான சம்பளம், கூலி மற்றும் இதர சலுகைகளுக்கான செலவு மிகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவு அந்தத் தொகையால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1.6.2. நிதி நிலை அறிக்கை

சொத்து வருமானம் இல்லை

ஆண்டின் இறுதியில் திணைக்களத்தின் மதிப்பாய்வு செய்யப்பட்ட இரண்டு நிலையான சொத்துகளின் மதிப்பு CIGAS திட்டத்தின்படி ரூ. 59,767,636 மற்றும் நிதிநிலை அறிக்கையின் படி அதன் மதிப்பு ரூ.74,977,453. எனவே நிதி அறிக்கையின்படி மதிப்பு ரூ.15,209,817 அதிகமாக

மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திணைக்களத்தின் நிலையான சொத்துகளின் நான்கு பொருட்களின் மதிப்பு CIGAS திட்டத்தின்படி ரூ.125,931,241 மற்றும் நிதிநிலை அறிக்கையின் படி அதன் மதிப்பு ரூ.102,556,055 ஆகும். எனவே நிதிநிலை அறிக்கைகளின்படி மதிப்பு ரூ .23,375,186 குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் நிதி அறிக்கைகள் மற்றும் CIGAS திட்டத்திற்கு இடையே ரூ.8,165,369 நிகர வேறுபாடு காணப்படுகிறது.

**1.6.3. பராமரிக்கப்படாத ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள்**

நிதி ஒழுங்குவிதி 89 (1) இன் படி பாதுகாப்பு வழங்கும் அலுவலர்களின் விவரம் அடங்கலான திணைக்களத்தால் பாதுகாப்பு பதிவேடு எதுவும் தயாரிக்கப்படவில்லை.

**2. நிதி ஆய்வு**

**2.1 வருவாய் முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

**வருவாய்க் குறியீடு 20:04:01:00 (மத்திய அரசு)**

(அ).திருப்பிச் செலுத்தப்பட்ட வருவாயை உறுதி செய்வதற்காக, 2001 ஜனவரி 15 ஆம் திகதியிட்ட 01/2001 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 1 (a) ஆம் பிரிவின் படி 2021 ஜூன் வரை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து பற்று அறிவிப்புகள் வரவில்லை அதாவது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூ .13,563,414.

(ஆ).2015 ஜூலை 20 ஆம் திகதியிட்ட 01/2015 ஆம் இலக்க பொது நிதி கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் படி, வருவாய்க்கான கணக்கீட்டு அலுவலர்களால் அது தொடர்பான வருவாய் குறியீடுகள் தொடர்புடைய மாதாந்த அறிக்கைகள் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பொது நிதி கொள்கை பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும் அந்த மாதாந்த செயல்திறன் அறிக்கைகள் 07 மாதங்களுக்கு 41 முதல் 107 நாட்கள் வரை தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டன. வரைவு சுருக்க அறிக்கைக்கு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் அளித்த பதிலின் அடிப்படையில், கோவிட் -19 தொற்றுநோயால் 2020 ஆம் ஆண்டில் தடையில்லா சேவை வழங்குவதை உறுதி செய்ய இயலாமை இத்தகைய தாமதத்திற்கு காரணம் எனக் காட்டப்பட்டுள்ளது.

(இ).விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு பற்றுச்சீட்டுகள் (மாகாண சபைகள்) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் வருவாய் மதிப்பீடு ரூ.12,000,000,000 மற்றும் சேகரிக்கப்பட்ட நிகர வருவாய் ரூ.11,022,784,468 ஆகும். நிகர வருவாய் குறைவு வருவாய் மதிப்பீட்டில் இருந்து 8% அதாவது ரூ. 977,215,532 ஆகும்.

(ஈ).வருவாய் குறியீடு 20.04.02.00 க்கான மாகாண சபைகளில் இருந்து விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புகளின் பற்றுச்சீட்டுகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் பங்களிப்பாளர்களின் நிலுவையில் உள்ள பங்களிப்புகளை அடையாளம் காண தரவுத் தளம் தயாரிக்கப்படவில்லை. மேலும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வருவாய் நிலுவையாக அறிவிக்கப்பட்டுள்ள பெறுமதி, நிதிநிலை அறிக்கையில் நிலுவையில் உள்ள வருவாயாக கணக்கிடப்பட்டுள்ளன. அதன்படி ஆண்டின் இறுதியில் மீளாய்வின் ரூ.823,984,589 மதிப்புள்ள நிலுவையில் உள்ள சரியான வருவாயை உறுதி செய்ய இயலாது. மேலும் பங்களிப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பற்றுச் சீட்டுகள் ரூ.11,021,652,894 இத்தொகை பங்களிப்பாளர்களின் கணக்குகளின்படி அடையாளம் காண முடியவில்லை. அதன்படி, விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தை செலுத்தும்போது ஒவ்வொரு பங்களிப்பாளரிடமிருந்தும் பங்களிப்புகள் தொடர்ந்து பெறப்பட்டதா என்பதை திணைக்களத்திலிருந்து உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும் ஓய்வூதியத் திணைக்களம்

நிலுவையில் உள்ள வருவாயை தாமதமின்றி மீட்டெடுக்கத் தவறிவிட்டது மற்றும் அதற்காகத் தேவையான ஏற்பாடுகளைத் தயாரிக்கவும் தவறிவிட்டது.

(உ) ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2001 ஜனவரி 15 ஆம் திகதியிட்ட 1/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவின் அடிப்படையில், அனைத்து அலுவலர்களதும் பங்களிப்புகளுக்கு ஒரு காசோலையாக வழங்கும் போது அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்கு முன் ஒவ்வொரு மாதமும் மீட்க அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆனால் இத்தகைய பங்களிப்புகள் 5 மாகாண சபைகளால் 29 முறை அனுப்பப்பட்டது, இதற்கான தாமதம் 15 நாட்கள் முதல் 96 நாட்கள் வரை மாறுபடுகின்றது. மேலும் தென் மாகாண சபை மற்றும் ஊவா மாகாண சபையால் ஒவ்வொரு மாதத்திற்கும் பங்களிப்புகளை அனுப்பும் போது, அவை மொத்தத் தொகையாக அனுப்பாமல் பாகங்களாக அனுப்பியுள்ளன. எனவே பரிந்துரைக்கப்பட்டதை விட 16 நாட்கள் முதல் 132 நாட்கள் வரை தாமதமாக அனுப்பப்பட்ட 20 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**கட்டடங்களது வாடகை**

(ஊ).2009 ஆம் ஆண்டு முதல் 31 டிசம்பர் 2015 வரையிலான காலப்பகுதியில் தேசிய வீட்டமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கட்டிட வாடகை நிலுவைத் தொகை ரூ.24,605,333 ஆகும். மேற்கூறிய நிறுவனங்கள் ஓய்வூதியத் திணைக்களத்துடன் மெற்கொண்ட வாடகை ஒப்பந்தம் அல்லது வாடகை செலுத்துவதற்காக மாதந்தோறும் வழங்கப்பட்ட விலைப்பட்டியல்களைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தும், அத்தகைய ஆவணங்களை சமர்ப்பிக்க திணைக்களம் தவறிவிட்டது.

(எ) கட்டிட வாடகை நிலுவைத் தொகை, 2020 ஜூன் 30 நிலவரப்படி 07 நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டும், இது ரூ .2,036,600 ஆகும் மற்றும் நேர பகுப்பாய்வின் படி ஒரு வருடத்தில் நிலுவைத் தொகை ரூ .299,000 ஆகும்.

**2.2 பொறுப்புகள் மற்றும் கடமைகளிற்குள் பிரவேசம்**

**ஏற்பாடுகளை மீறிய பொறுப்புகள்**

253-1-2-4 என்ற இலக்கத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவோருக்கான பணிக்கொடை செலுத்துவதற்கான வாக்கின் கீழ் மீளாய்வின் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்ட மீதமுள்ள தொகை ரூ.5,349,310,643 என்றாலும், பொறுப்புகளின் அறிக்கையின்படி அந்த வாக்கின் கீழ் பொறுப்பு ரூ.5,392,442,185 ஆகும். எனவே ஏற்பாடுகளை மீறிய பொறுப்பு ரூ.43,131,542.

**2.3 கணக்கீட்டு அதிகாரியால் செய்யப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி கணக்கீட்டு அலுவலர் பின்வரும் விடயங்கள் குறித்து சான்றிளித்தல் செய்ய வேண்டும் ஆனால் அதற்குப் தேவையான நடவடிக்கைகள் பின்பற்றவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஒரு உற்பத்தி திறன் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுவதாக கணக்கீட்டு அலுவலர் உறுதியளிக்க வேண்டும் என்பதுடன் மேலும் தேவையான விமர்சனங்களை அறிமுகப்படுத்தும் அதே நேரத்தில் உற்பத்தித்திறன் குறித்து அவ்வப்போது மேலும் மதிப்பாய்வுகள் பராமரிக்கப்படவேண்டும். மேலும் விமர்சனங்கள் எழுத்துப்பூர்வமாக செய்யப்பட வேண்டும் என்பதுடன் மதிப்பாய்வுகளின் நகலை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் அத்தகைய ஆய்வு செய்யப்பட்டதாக எந்த அறிக்கையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ).கணக்காய்வாளர் நாயகத்தின் தேவைக்கேற்ப அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதில்கள் வழங்கப்படுவதை கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்ய வேண்டும் எனினும், 2020 நிதியாண்டு எழுப்பப்பட்ட 17 கணக்காய்வு ஐயவினாக்களால் தொடர்பாக கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில்கள் அளிக்கப்படவில்லை என்பதுடன் கணக்காய்வு ஐயவினாக்களால் தெளிவுபடுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி ரூ.45,980,603 ஆகும்.

### 2.4. சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்காதவை

அவதானிப்புகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் குறிப்பு | பெறுமதி ரூ. | இணக்கம் இல்லாதவை |
|---|---|---|
| ஓய்வூதியச் சுற்றறிக்கை<br>(i) 2015 செப்டம்பர் 14 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்க மற்றும் ஆம் திகதிய 08/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைகள் | | 22 வயதிற்குட்பட்ட சிறார்களின் வங்கிப் புத்தகங்கள் திம்பிரிகஸ்யாய, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே மற்றும் யடினுவாரா ஆகிய பிரதேச செயலகங்களால் சமர்ப்பிக்கப்படவில்லை, 18 வயதை எட்டிய பிறகும் அவர்களின் தற்போதைய முகவரிகளை கண்டுபிடிக்க முடியாதுள்ள மேலும் அவர்களுக்கு பல நினைவூட்டல்கள் அனுப்பிய பின்னரும் அவர்கள் வங்கிப் புத்தகத்தை பெற வரவில்லை. மேற்கூறியவற்றில் 20 வங்கிப் புத்தகங்களைப் புதுப்பித்த திகதியிலுள்ள மொத்த பெறுமதி ரூ.2,145,720. |
| (ii) 2013 டிசம்பர் 03 ஆம் திகதிய 06/2013 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2011 யூன் 14 ஆம் திகதிய 02 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைக் கடிதம் | | சம்பந்தப்பட்ட மாதத்திற்கு அடுத்த மாதத்தில் செலுத்தப்படாத ஓய்வூதியங்கள் திணைக்களத்திற்கு திருப்பித் அனுப்பப்பட வேண்டும் எனினும், திம்பிரிகஸ்யா மற்றும் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகங்கள் பொது வைப்பு கணக்கில் ரூ.1,848,838 ஐ 07 முதல் 14 மாதங்கள் வரை வைத்திருக்கின்றன. |

### 2.5. முற்பணத்தை தீர்தலும் வழங்கலும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் பெறப்படுகின்றன.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பொது அலுவலர்களின் முற்பண கணக்கு நல்லிணக்க அறிக்கையின் அடிப்படையில், இடைநீக்கம் செய்யப்பட்ட, பதவிவெறிதாக்கப்பட்ட, இடமாற்றம் செய்யப்பட்ட 12 அலுவலர்களிடமிருந்து மீட்கப்பட வேண்டிய மீதமுள்ள தொகை, ரூ.718,350 ஆகும் என்பதுடன் இந்த நிலுவைகள் தொகையின் நிலுவை காலம் 05 வருடங்களுக்கு மேல், கணக்காய்வுத் திகதிக்குள் கொடுத்து தீர்க்கப்படவில்லை.

(ஆ) திணைக்களத்தின் புத்தகங்களின்படி, 2020 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, பொது அலுவலர்களின் முற்பணக் கணக்கின் தனிநபர் இருப்பு வகைப்படுத்தலின் சுருக்கத் தொகையின் மொத்த ரூ.168,586,842 மற்றும் அத்தொகை கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரம் மீதி ரூ.168,558,187 ஆகும். எனவே இந்த நிலுவைகளுக்கு இடையே ரூ .298,655 வித்தியாசம் காணப்பட்டது. இருப்பினும், சரிசெய்யப்பட்டபின்னர் திணைக்களத்தின் புத்தகங்களிற்கிடையேயும், திறைசேரி கணினி அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு இடையேயும்

எந்த வித்தியாசமும் இல்லை என்று சான்றளிக்கப்பட்டுள்ளது ஆனால் அது சரியானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. செயல்பாட்டு ஆய்வு

### 3.1. செயல்திறன்

#### 3.1.1. திட்டமிடல்

விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தை தொடர்புடைய பயனாளிகளுக்கு வழங்குவதோடு அதற்கு மேலதிகமாக,

2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் விசேட முன்னுரிமைகளின் கீழ், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு மேலதிகமாக (semi government banks) அரச சார்பான வங்கிகள் மற்றும் தனியார் துறைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

எனினும் அந்த நடவடிக்கைகள் செயல் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. பணிப்பாளர் நாயகத்தால் வரைவு அறிக்கைக்கு அளித்த பதிலின் படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான நேரடி செல்வாக்கு செலுத்த, வழிப்படுத்த அல்லது ஒழுங்கு செய்ய இதுவரை திணைக்களத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

#### 3.1.2. வருடாந்திர செயல்திறன் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை 10.2 ஆம் பந்தியின் அடிப்படையில், பொது நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய வருடாந்த செயல்திறன் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிதி கணக்காய்வு அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயல்திறன் அறிக்கை அரச கணக்காய்வுப் பிரிவினால் ஒவ்வொரு பிரிவிலும் சுயாதீனமாக பெறப்பட்ட தகவல்களுடன் சமரசம் செய்யப்படும்போது பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| தொ. இல | விபரம் | செயல்திறன் அறிக்கையின் படி இருப்பு ரூ. | தொடர்புடைய பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி இருப்பு ரூ. | வேறுபாடு ரூ. |
|---|---|---|---|---|
| 01 | டிசம்பர் மாதத்திற்கான பொதுச் சேவை வருங்கால வைப்பு நிதிக்கு பற்றுச் சீட்டுகள் | 61,399,468 | 61,457,155 | 57,687 |
| 02 | ஏப்ரல், மே மாதங்கள் தொடர்பாக பொதுச் சேவை வருங்கால வைப்பு நிதிக்கு பணம் செலுத்துதல் | 38,364,041 | 22,364,041 | 16,000,000 |
| 03 | வட்டிக்கு வருமானம் | 30,360,072,498 | 31,562,748,355 | 1,202,675,857 |
| 04 | சிவில் மற்றும் ஆயுதப்படைகளில் பணிக்கொடை செலுத்துதல்<br>(i) இலக்கம்<br>(ii) பெறுமானம் | 24,149<br>26,237,294,814 | 24,524<br>26,808,301,923 | 375<br>571,007,109 |

### 3.2 பெறுகைகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்படுகின்றன.

### 3.2.1. கட்டுமான ஒப்பந்தங்களின் ஆய்வு

(அ) நிதி ஒழுங்கு விதி 701 (i) இன் படி, முடிக்க வேண்டிய காலக்கெடு மற்றும் தாமதமான காலத்திற்கான இழப்புகள் போன்ற விடயங்கள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் இது 03 கட்டுமான ஒப்பந்தங்களில் நடத்தப்பட்ட மாதிரி சோதனையில் ரூ.5,909,881 ஒப்பந்தத்திற்கான பெறுமதி இந்த பிரிவுகளில் சேர்க்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.

(ஆ) மேலும், பெறுகை வழிகாட்டுதல்களின் 8.12.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதற்கான சான்றிதழ் பொறியாளர்/ ஆலோசகரால் வழங்கப்பட வேண்டும், அத்தகைய சான்றிதழ் இந்த ஒப்பந்தங்களின் சார்பில் வழங்கப்படவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டுதல்களின் 2.14.1 ஆம் பிரிவில் 35 ஆம் துணைப் பிரிவின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தன் அடிப்படையில், கட்டுமான ஒப்பந்தங்களுக்கான கூறுவிலைகொரல்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து கொரப்பட வேண்டும், ஆனால், வெதமுல்லா, களனியில் உள்ள விடுமுறை விடுதியின் மாற்றியமைப்பு மற்றும் பராமரிப்புக்காக ஒரு ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது தொலைபேசி கோப்பு புத்தகத்தின் வானவில் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 03 ஒப்பந்ததாரர்களிடமிருந்து கூறுவிலை கோரியதன் மூலம் அவ் ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும் பின்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன. கூறுவிலை கோரும்போது நிலையான ஒப்பந்த ஆவணங்கள் பயன்படுத்தப்படவில்லை. மேலும் செயல்திறன் முறி சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை நிலையான ஆவணங்களின்படி சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.3.1 நிதி முறைகேடுகளின் இயல்பான பரிவர்த்தனைகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்படுகின்றன.

(அ) பிரதேச செயலகங்களுக்கிடையே ஓய்வூதியக் கோப்பு மாற்றப்பட்டாலும், தரவுத்தளம் இற்றைப்படுத்தப்படாமையால் கங்காவட்ட கோரலே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஓர் ஓய்வூதியருக்கு ஆகஸ்ட் 2004 முதல் டிசம்பர் 2019 வரை ஓய்வூதிய இலக்கங்கள் 01-603037 மற்றும் 01-1603037 இன் கீழ் இரண்டு ஓய்வூதியங்கள் மோசடியாக வழங்கப்பட்டுள்ளன. F.R.104 இன் கீழ் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்திற்கு அதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூ.2,169,551 என மதிப்பிடப்பட்டிருந்தாலும், 2008 ஆம் ஆண்டுக்கு முன் 41 மாதங்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியத் தொகை கணக்கிடப்படவில்லை. இந்த ஓய்வூதியதாரர் 2021 மார்ச் 02 அன்று இறந்துள்ளார் மேலும் ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட திகதி முதல் இறக்கும் திகதி வரை அவரிடமிருந்து நிலுவைத் தொகையைக் கழித்த போதும் மீட்கப்பட வேண்டிய ரூ.1,839,320 க்கும் அதிகமான நிலுவைத் தொகை இருந்தது.

(ஆ) 2011 மே 16 ஆம் திகதிய 04/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை, 2012 டிசம்பர் 20 ஆம் திகதிய 05/2012 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2014 நவம்பர் 03 ஆம் திகதிய 13/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம், பல ஓய்வூதியங்களை இணைத்து ஓய்வூதியம் வழங்கப்படும் போது இடைக்கால கொடுப்பனவு கட்டாயமாக

ஒருங்கிணைந்த சம்பளத்திற்கு வழங்கப்பட வேண்டும். மாதிரி சோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின்படி,

இடைக்கால கொடுப்பனவாக கட்டானா பிரதேச செயலகத்தின் 03 ஓய்வூதியர்களுக்கு அதிகமாக செலுத்தப்பட்ட தொகையில் இருந்து நிலுவைத் தொகையாக ரூ .867,317 30 ஜூன் 2021 நிலுவையில் உள்ளது. மேலும் வாரியபொல பிரதேச செயலகம் 03 ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.623,750 இடைக்கால கொடுப்பனவு ஜூன் 2021 க்குள் மீட்டெடுக்கப்படவில்லை.

(உ).மாதிரி சோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின்படி, ஓய்வூதியம் பெறுவோரின் இறப்பைத் தெரிவிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அவர்களது ஓய்வூதியத்தின் கீழ் அதிகப்படியான பணம் செலுத்தப்பட்டதா என்பதை சரிபார்க்காமையால் திம்பிரிகஸ்யாயா பிரதேச செயலகத்தின் ஓர் ஓய்வூதியருக்கு ரூ.352,030 மதிப்புள்ள ஓய்வூதியம் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. எனினும் கணக்காய்வுத் திகதிக்குள் கூட அந்த அதிகப்படியான தொகையை வசூலிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஊ).ஓய்வூதியரின் மரணத்தை அறிவிப்பதில் தாமதம் காரணமாக ஓய்வூதியத்தில் அதிகப்படியான பணம் செலுத்தப்படும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில், ஏடிஎம் அட்டைகளை பயன்படுத்தி வங்கிக் கணக்கிலிருந்தும் ஏனைய நபர்களால் இணைந்த கணக்குகளிலிருந்தும் பணம் எடுக்கப்படும்போது அக் கணக்குகளில் போதுமான இருப்பு இல்லாமையால் இத்தகைய அதிகப்படியான கொடுப்பனவுகளை மீட்க முடியவில்லை. கணக்காய்வு மாதிரி சோதனைகளில், மொத்தம் ரூ.2,904,712 மீதமுள்ள நபர்களிடமிருந்து 2020 டிசம்பர் 31 க்குள் மீட்கப்பட வேண்டும் என்பது தெரியவந்தது, அத்தகைய பணத்தை மோசடியாக பெற்றவர்கள் மற்றும் தொகையின் விவரங்கள் பின்வருமாறு. திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம் 16 சந்தர்ப்பங்களில் மீட்க வேண்டிய தொகை ரூ.1,125,6900 மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தால் 13 முறை மீட்கப்பட வேண்டிய தொகை ரூ .1,779,112.

(எ) ஓய்வூதியம்/ விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் அதிகமாக வழங்கப்பட்டு, ஓய்வூதியரின் மரணத்தை தெரிவிப்பதில் தாமதம் ஏற்படும் சந்தர்ப்பங்களில், போதுமான இருப்பு இருந்து பணத்தை திருப்பித் தருவதாக அறிவித்த பிறகும் வங்கி பதிலளிக்கவில்லை என்றால், அவசியம் தொகையை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், 94 முறைக்கு மேல் செலுத்தப்பட்ட நிலுவைத் தொகை ரூ .8,643,512 வை மீட்க திம்பிரிகஸ்யா பிரதேச செயலகம் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம் ஆகியவை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மாதிரி சோதனைகளில் தெரியவந்தது. ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தில் மேற்கூறியவற்றிலிருந்து அதிகப்படியான பணம் செலுத்தப்பட்ட காலம் 1 முதல் 4 ஆண்டுகள் வரை மாறுபடும்.

(ஏ) ஓய்வூதியர்களுக்கு நடத்தப்பட்ட மாதிரி சோதனையில், உயிர்வாழ்ச் சான்றிதழ்களை சமர்ப்பிக்காததால் ஜூலை 2021 மற்றும் ஜூன் 2019 இல் ஓய்வூதியத் திணைக்களத்தால் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டவர்கள், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம் மற்றும் கடுவெலவை பிரதேச செயலகம் ஆகியவற்றைச் சேர்ந்த முறையே 10 மற்றும் 03 ஓய்வூதியர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது தெரியவந்தது, மேலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு ஓய்வூதியரின் மரணத்தை தெரிவிக்கவில்லை என்பதுடன் இறந்த நாளிலிருந்து ஓய்வூதியத்தை முடிக்கும் திகதி வரை கூடுதல் தொகை ரூ.5,050,228 கிராமசேவையாளருக்கோ அல்லது ஓய்வூதியரின் உறவுவினர்களுக்கோ கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அடையாளம் காணவும் நிதி ஒழுங் விதி 103 மற்றும் 104 ன் படி மீட்கவும் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஐ) யடினுவாரா பிரதேச செயலகத்தின் 0-4-0303/0-06-3031 ஆம் ஓய்வூதிய இலக்கம் கொண்ட ஓய்வூதியருக்கு அதிகமாக செலுத்தப்பட்ட இடைக்கால கொடுப்பனவு 01 நவம்பர் 2015 முதல் 31 மார்ச் 2020 வரை ரூ .75,250 மற்றும் அது தரவுத்தளத்தில் உள்ளிடப்பட்டுள்ளது ஜூன் 2021 முதல் மாதாந்தம் ரூ .1500 மீட்கப்பட்டுகிறது . இருப்பினும் மேலும் மீட்க வேண்டிய தொகை ரூ.73,750.

### 3.3.2. இழப்புகள் மற்றும் சேதங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்படுகின்றன.

(அ) நிதிநிலை அறிக்கையின் குறிப்பு இலக்கம் 01 இன் படி, ஆண்டின் இறுதிக்குள் மேலும் மீளாய்வில் மேலதிகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து ரூ.521 மில்லியன் தொகை மீட்கப்பட வேண்டும். இந்த இருப்பு ரூ.4.8 மில்லியனை 10 வருடங்களுக்கும் மேலாகவும், மீதமுள்ளது ரூ .66 மில்லியன் 5-10 வருடங்களாகவும் மற்றும் ரூ .450 மில்லியன் 5 வருடங்களுக்கும் குறைவாகவும் உள்ளது.

(ஆ) ஓய்வூதியத் திணைக்களத்தின் மீட்பு மீதி தொகை 04 பிரதேச செயலகங்களின் புத்தகங்களின்படி ரூ.1,998,087 என்பதுடன் இழப்புகள் மற்றும் சேதங்களின் பதிவின் படி இது ரூ .1,826,567 ஆகும். அதன்படி இழப்புகள் மற்றும் சேதங்களின் பதிவின் படி மீதம் ரூ.171,547 குறைத்து மதிப்பிடப்பட்டது. திணைக்களத்தின் புத்தகங்களின்படி 02 பிரதேச செயலகங்களின் இருப்பு ரூ.1,741,957 ஆகவும், இழப்பு மற்றும் சேதங்களின் பதிவின்படி மீதி ரூ .1,908,799 ஆகவும் இருப்பதால், இழப்பு மற்றும் சேதங்களின் பதிவின் படி மீதி ரூ .166,842 அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) கங்காவட்ட கோரலே பிரதேச செயலகத்தால், நீக்கப்பட்ட ஓய்வூதியருக்கு அதிகமாக வழங்கப்பட்ட ரூ.72, 600 தொகை ரூ .93,600 தொகையில் இருந்து 2021 ஜூலை 01 க்குள் மீட்கப்பட வேண்டும்.

### 3.4. முகாமைத்துவக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜூலை 01 தொடக்கம் 2020 ஆகஸ்ட் 10 வரை 4-50111 எனும் ஓய்வூதிய இலக்கத்தையுடைய ஓய்வூதியருக்கு மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவாக செலுத்தப்பட வேண்டிய ரூ .6,855 ஐ தொகையை ரூ .20,860 தொகையாக பிரதேச செயலகம் செலுத்தியுள்ளதால், செலுத்தப்பட்ட அதிகப்படியான தொகை ரூ .687,790. அதன்படி, ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கு தொடர்புடைய ரூ .128,553 அறவிடப்பட்டபின்னர் மீட்கப்பட வேண்டிய ரூ.559,236 தொகை குறித்து FR.104 இன் படி விசாரணை நடத்துமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் அதிகமாக செலுத்தப்பட்ட தொகை மீட்கப்படவில்லை.

(ஆ) ஓய்வூதியர், 21-800003 என்ற ஓய்வூதிய இலக்கத்தின் கீழ் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தைப் பெறுகிறார், 16.12.2009 அன்று மீண்டும் திருமணம் செய்து கொண்டார், ஆனால் அவர் அதை திணைக்களத்திற்கு தெரிவிக்கவில்லை. அத்தகைய சூழ்நிலையில், குழந்தைக்கு 18 வயதை அடையும் வரை குழந்தையின் வங்கி கணக்கில் ஒரு பகுதியை வரவு வைப்பதற்கும், மீதமுள்ள பகுதியை பாதுகாவலருக்கு வரவு வைப்பதற்கும், அவருக்கு உரிமையான விதவைகளின் ஓய்வூதியத்தை வழங்குவதற்கும் ஓய்வூதியம் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்யாமல், அந்த குழந்தைக்கு 26 வயதை எட்டும்வரை, 16 டிசம்பர் 2009 முதல் 24 பிப்ரவரி 2019 வரை மொத்தத் தொகையான ரூ.1,737,978 பாதுகாவலருக்கு முழுமையாக வழங்கப்பட்டது.

(இ) 2868 சதுர அடி வளாகம் 05 அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் கொடுக்கப்பட்டிருந்தாலும், வாடகை ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை.

(ஈ) வளாகத்தில் தங்கள் அலுவலகங்களை பராமரித்து வந்த 04 நிறுவனங்களின் வாடகை காலம் முடிவடைந்தாலும், 31 டிசம்பர் 2020 க்குள் கூட ஒப்பந்தங்களை புதுப்பிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(உ) ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் ஒரு ஓய்வூதியக் கோவை பராமரிக்கப்பட வேண்டும் என்றாலும், திம்பிரிகஸ்யாயா பிரதேச செயலகத்தில் 369 ஓய்வூதியர்களின் கோவைகள் தவறவடப்பட்டுள்ளமை எமது மாதிரி சோதனைகளில் தெரியவந்தது.

(ஊ) ஓய்வூதிய தரவுத் தளத்தில் செப்டம்பர் 2020 இன் கொடுப்பனவு தரவை ஆய்வு செய்ததில், பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 இன் படி 3906 ஓய்வூதியக் கோவைகளின் ஓய்வூதியம் திருத்தப்படவில்லை என்பது தெரியவந்தது. பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 மற்றும் 14/2019 களின் படி அனைத்து அரசு அலுவலர்களின் ஓய்வூதியத்தை சரிசெய்த போதும், 01 ஜனவரி 2017 க்கு முன் ஓய்வு பெற்றவர்கள், 01 ஜுன் 2019 அன்று 11 ஜுன் 2019 திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கை 01/2019 இன் மூலம் செய்யப்பட வேண்டும். தேசிய அடையாள அட்டை இலக்கம் கிடைக்காதமை மற்றும் போர் மற்றும் பிற காரணங்களால் கோப்புகள் தவறவடப்பட்டமை ஆகிய காரணங்களால் 13 ஜனவரி 2021 க்குள் திருத்தப்படாத ஓய்வூதியக் கோப்புகளின் எண்ணிக்கை 39,373 ஆகும்.

### 3.5 . செயல்பாட்டு திறமையின்மை

ஓய்வூதியத் திணைக்களம் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிக்கும் அதிகாரிகளின் தரவுத் தளத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்த சரியான தகவல்கள் இல்லாததால், உரிமைகளைச் வழங்கும் போது விதவைகள்/ விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத் திட்டத்தின் உரிமைகோரல்கள் மற்றும் பங்களிப்புகளை மீளப்பெறல் போன்றவை முறையாகவும் தொடர்ச்சியாகவும் பெறப்பட்டதா என்பதைத் திணைக்களத்திலிருந்து சரிபார்க்க இயலாதுள்ளது.

## 4. நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

நிதி கட்டுப்பாட்டு முறை பற்றிய அடிப்படை ஆய்வு, விடுமுறை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு ஆய்வு, பொது மக்களால் செய்யப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பது போன்ற உள்ளக கணக்காய்வு திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் செயல் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மேலும், வருவாய் சேகரிப்பு ஆய்வு, பயிற்சி செயல்முறை ஆய்வு, கட்டுமான ஒப்பந்தங்கள் மற்றும் கொள்முதல் போன்ற துறைகளில் 2020 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஒரே ஒரு கூட்டம் 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

ரி.ஜி.ஐ.பத்மினி
உதவிக் கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகத்திற்காக.

பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவிற்கமைய 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் பொதுச் சேவை வருங்கால வைப்பு நிதியின் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கை.**

---

**1. நிதிநிலை அறிக்கைகள்**

**1.1. கருத்து மறுப்பு**

பொதுச் சேவை வருங்கால வைப்பு நிதியத்தின் 2020 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளின் மீதான கணக்காய்வு வருவாய் மற்றும் செலவு கணக்கை உள்ளடக்கியதுடன் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் மற்றும் பின்னர் முடிவடைந்த ஆண்டிற்கான குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் ஆகியவை, 1942 ஆம் அண்டின் 18 ஆம் இலக்க பொதுச் சேவை வருங்கால வைப்பு நிதியக் கட்டளைச்சட்டத்தின் 62(1) ஆம் அத்தியாயத்தின் 24(1) ஆம் பிரிவிற்கு இசைவாகவும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(3) ஆம் பிரிவன் ஏற்பாடுகளிற்கமையவும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசையவும் எனது வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவன் ஏற்பாடுகளுக்கு இசைய எனது அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிநிலை அறிக்கையில் நான் எனது கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை. முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்காக போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

**1.2 கருத்து மறுப்புக்கான அடிப்படை**

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின் 01 ஆம் இலக்க தரநிலையின் படி நிதி பொது அறிக்கையிக்கான கணக்குகள் திரட்டப்பட்டதாக நிதி வெளிப்படுத்தியிருந்தாலும், 2.4 (9 சி) (ii) ஆம் இலக்க கணக்கியல் கொள்கையின் நிதி அறிக்கைகளில் பங்களிப்புகள் பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ரூ. 328,201,324, வருடத்தில் பெறப்பட்ட கட்டாய பங்களிப்பு பண அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

(ஆ) கணக்காய்வுக்கான ஆதாரம் இன்மை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(i) ஊழியர் சேமலாப நிதியின் தனிப்பட்ட கணக்குகளை முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படாதிருத்தல், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் உறுப்பினர்களை சரிபார்ப்பதற்காக உறுப்பினர்களின் பதிவு கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில், பங்களிப்புகளின் கோரிக்கைகளின்படி 2020 டிசம்பர் 31 அன்று கட்டாய பங்களிப்புக் கணக்கின் ரூ.28,972,771,536 இருப்பு, தன்னார்வ

பங்களிப்பு கணக்கின் தொகை ரூ .44,799,765 மற்றும் அரசு பங்களிப்பு கணக்கின் தொகை ரூ.44,820,450,342 ஆகியவற்றை தனித்தனியாக அடையாளம் காண இயலாது.

(ii) பல்வேறு அரசாங்க நிறுவனங்களால் நிதியத்தின் கணக்கில் வரவு மற்றும் பற்றுக்கள் தொடர்பாக அடையாளம் காணப்படாத நிலுவைகள் மாதாந்த கணக்குச் சுருக்கங்கள் ஊடாக ஒரு சீரக்கல் கணக்கில் பதியப்படும். அதற்கமைய சீராக்கல் கணக்கில் பல ஆண்டுகளாக மீதமுள்ள அடையாளம் காணப்படாத நிலுவைத் தொகை 2020 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி ரூ.29,811,314 ஆகும். ஒரு விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வில் திருப்திகரமான அளவில் அந்த இருப்பு குறித்து ஒரு கணக்காய்வுக் கண்காணிப்பை நடத்த இயலாது. மேலே விவரிக்கப்பட்டபடி, இருப்புநிலை, வருவாய் மற்றும் செலவு கணக்கு மற்றும் பணப்பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றில் சேர்க்கப்பட்ட அளவுகளையோ பெறுமானங்களையோ, மாற்று முறைகளைப் பயன்படுத்தி என்னால் உறுதிப்படுத்தவோ சரிபார்க்கவோ முடியவில்லை. அத்தகைய சூழ்நிலையில், இருப்புநிலை, வருவாய் மற்றும் செலவு கணக்கு மற்றும் பணப்புழக்க அறிக்கை ஆகியவற்றால் தொகைகள் அல்லது பொருட்களில் அறிக்கையிடப்பட்ட அல்லது பெறப்படாத தொகைகளில் அல்லது பரிவர்த்தனைகளில் ஏதேனும் திருத்தம் தேவையா என்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

### 1.3. நிர்வாகத்தின் பொறுப்புகளும் நிதி அறிக்கைகளுக்கான கட்டுப்பாட்டுடன் பொறுப்பானவர்களும்

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாவதுடன், நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது முகாமைத்துவம் தீர்மானிப்பது போன்ற அவசியமான உள்ளக கட்டுப்பாட்டுடன் மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருள் தவறான விளக்கங்கள் அற்ற நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பது அவசியமாகும்.

நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதில், நிதியத்தின் திறனை அதாவது நிறுவனம் தனது கடமைகளைச் சமாளிக்க மற்றும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளைத் தொடர போதுமான நிதி நிலையில் உள்ளது என்பதை தொடர்ந்து மதிப்பிடுவதற்கு முகாமைத்துவம் பொறுப்பாவதுடன் பொருந்தும் வகையில், நிறுவனம் தனது கடமைகளைச் சமாளிக்கவும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளைத் தொடரவும் போதுமான நிதி நிலையில் உள்ளது என்பது தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துகிறது அத்துடன் முகாமைத்துவம் நிதியை குறைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ, அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று இல்லை என்றால் கணக்கியலின் நிறுவனம் தனது கடமைகளைச் சமாளிக்கவும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளைத் தொடரவும் போதுமான நிதி நிலையில் உள்ளது எனும் அடிப்படையைப் பயன்படுத்துதல்.

நிர்வாகத்தின் பொறுப்பானவர்கள் நிதியின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடும் பொறுப்பில் உள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைய நிதி மற்றும் வருவாய், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்க வேண்டியது அவசியம்.

**1.4. நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்**

இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு இணங்க நடத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் நிதியின் நிதிநிலை அறிக்கையில் கணக்காளரின் அறிக்கையை வெளியிடுவதே எனது பொறுப்பு.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை**

**2.1**. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தேவைகளுக்கான குறிப்பிட்ட விதிகளை உள்ளடக்கியது.

**2.1.1**. நிதியத்தின் நிதிநிலை அறிக்கைகள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d)(iii) ஆம் பிரிவின் தேவைகளுக்கு இணங்குகின்றன.

**2.1.2.** வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், பந்தி 1.2. (அ) (ஆ) இல் செய்யப்பட்ட அவதானிப்புகள் தவிர்ந்த, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iv) இன் தேவையின் படி முந்தைய ஆண்டில் நான் செய்த அனைத்து பரிந்துரைகளும் அடங்கும்.

**3. செயல்பாட்டு ஆய்வு**

**3.1.செயல் திறன்**

ஓய்வூதியமில்லாத பதவிகளை வகிக்கும் அரசு ஊழியர்களுக்கு நன்மைகளை வழங்குவதன் முக்கிய நோக்கத்துடன் பொதுச் சேவை வருங்கால வைப்பு நிதி நிறுவப்பட்டுள்ளது. அதன்படி, பரிசீலனை செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 வரை நிதியத்தின் நன்மைகளைப் பெறுவதற்காக நிதியத்தின் உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 5188 விண்ணப்பங்களில் 987 விண்ணப்பங்களுக்கு பணம் செலுத்தப்படவில்லை. மேலும் கொவிட்-19 தொற்றுநோயை காரணமாக திணைக்களத்தை மூடப்பட்டமையால் அலுவலர்களை பணிக்கு அழைக்க முடியாமையே பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமைக்கான காரணம் என நிதியின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயகம்.

எனது.இல. எல்.ஈ.டபிள்யு/டி/டிஓபி/02/20/56 2021 யூன் 30

பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் அடிப்படையில் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஆசிரியர்கள் விதவைகள் மற்றும் அனாதை ஓய்வூதிய நிதியின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

## 1. நிதிநிலை அறிக்கைகள்

### 1.1. தகுதிவாய்ந்த அபிப்பிராயம்

ஆசிரியர்கள் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய நிதியின் 2020 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் கணக்காய்வு வருவாய் மற்றும் செலவு கணக்கை உள்ளடக்கியதுடன் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் மற்றும் பின்னர் முடிவடைந்த ஆண்டிற்கான குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம், 1953 ஆம் அண்டு 44 ஆம் இலக்கம் படசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் 5 மற்றும் 9 ஆம் பிரிவின் கீழ் உள்ள 6 (1) ஆம் உபபிரிவின ஏற்பாடுகளின் அடிப்படையிலும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் பிரிவன் விதிகளிற்கமையவும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசையவும் எனது வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவன் விதிகளிற்கமைய எனது அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

என் கருத்துப்படி, எனது அறிக்கையின் தகுதிவாய்ந்த கருத்துப் பிரிவின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர, அதனுடன் கூடிய நிதிநிலை அறிக்கைகள் 31 டிசம்பர் 2020 அன்று நிதியின் நிதி நிலையைப் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிப்பதுடன் அதன் நிதி செயல்திறன் மற்றும் அதன் பணப்பாய்ச்சல் பின்னர் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப முடிவுறுத்தப்பட்டது.

### 1.2 தகுதிவாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படை

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின் 01 ஆம் இலக்க தரநிலையின் படி நிதி பொது அறிக்கையிக்கான கணக்குகள் திரட்டப்பட்டதாக நிதி வெளிப்படுத்தியிருந்தாலும், 1988 ஆம் ஆண்டிலிருந்துஎ 3 உதவிப் பள்ளிகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கான பங்களிப்பாக ரூ.1,631,064 பெறப்பட்டது, இது வருவாய் மற்றும் செலவுக் கணக்கில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் பங்களிப்புகளாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் உதவி பெற்ற பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட ரூ.1,552,883 தொகையின் மொத்த தொகை ரூ.1,735,673 ஆகும் என்பதுடன் ரூ.182,790 பங்களிப்புகளாக பெறப்பட வேண்டும், நிதி அறிக்கைகளில் பங்களிப்புகளாகப் பெற்றதாகக் காட்டப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) ஏற்ப எனது கணக்காய்வை நடத்தினேன். எனது அறிக்கையின் நிதி அறிக்கைகள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளர் பொறுப்புகளில் அந்த தரங்களின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எனது தகுதிவாய்ந்த கருத்துக்களுக்கான அடிப்படையை வழங்க போதுமானதும் பொருத்தமானதும் என்று நான் நம்புகிறேன்.

### 1.3 நிர்வாகத்தின் பொறுப்புகளும் நிதி அறிக்கைகளுக்கான கட்டுப்பாட்டுடன் பொறுப்பானவர்களும்

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளிற்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கு முகாமைத்தும் பொறுப்பாவதுடன் மோசடி அல்லது பிழை காரணமாக, பொருள் தவறாக இல்லாத நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவ தீர்மானம் போன்ற உள் கட்டுப்பாடு அவசியம்.
நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதில், நிதியத்தின் திறனை அதாவது நிறுவனம் தனது கடமைகளைச் சமாளிக்க மற்றும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளைத் தொடர போதுமான நிதி நிலையில் உள்ளது என்பதை தொடர்ந்து மதிப்பிடுவதற்கு முகாமைத்துவம் பொறுப்பாவதுடன் பொருந்தும் வகையில், நிறுவனம் தனது கடமைகளைச் சமாளிக்கவும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளைத் தொடரவும் போதுமான நிதி நிலையில் உள்ளது என்பது தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துகிறது அத்துடன் முகாமைத்துவம் நிதியை குறைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ, அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று இல்லை என்றால் கணக்கியலின் நிறுவனம் தனது கடமைகளைச் சமாளிக்கவும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளைத் தொடரவும் போதுமான நிதி நிலையில் உள்ளது எனும் அடிப்படையைப் பயன்படுத்துதல்.

நிர்வாகத்தின் பொறுப்பானவர்கள் நிதியின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடும் பொறுப்பில் உள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைய நிதி மற்றும் வருவாய், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்க வேண்டியது அவசியம்.

### 1.4. நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கைகள் மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருள் தவறாக இல்லாதவாறு , நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காயவு அறிக்கையை வெளியிடுவதும் எனது குறிக்கோள்கள் அகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப நடத்தப்படும் கணக்காய்வு எப்போதுமே ஒரு பொருள் தவறாக இருப்பதை கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. மோசடி அல்லது பிழையிலிருந்து தவறான கருத்துக்கள் எழலாம் என்பதுடன் இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் தனிப்பட்ட முறையில் அல்லது மொத்தமாக அவை நியாயமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் தொழில்முறை தீர்ப்பைப் பயன்படுத்துகிறேன் என்பதுடன் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சந்தேகத்தை கொண்டிருக்கிறேன். எனக்கும் கூட:

- நிதி அறிக்கைகளின் பொருள் தவறான அறிக்கையின் அபாயங்களை அடையாளம் கண்டு மதிப்பிடுதல், மோசடி அல்லது பிழை காரணமாக இருந்தாலும், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை சான்றுகளைப் பெறுதல். மோசடியின் விளைவாக ஏற்படும் ஒரு தவறான தகவலைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாக உள்ளது, ஏனெனில் மோசடி கூட்டு, போலி, வேண்டுமென்றே விடுபடுதல், தவறாகப் பிரதிபலித்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- சூழ்நிலைகளிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுக்கு உட்பட்ட உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுதல், ஆனால் அது நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் ஏற்புடைய தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியலின் அடிப்படையில் நிறுவனம் எதிர்காலத்தில் அதன் கடமைகளை நிறைவேற்றவும் அதன் வணிகத்தைத் தொடரவும் நிதியை நிர்வாகத்தின் நிலையான பயன்பாட்டின் சரியான தன்மையையும், பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனம் எதிர்காலத்தில் அதன் கடமைகளை நிறைவேற்றவும் அதன் வணிகத்தைத் தொடரவும் போதுமான நிதி நிலையைத் தொடர்வதற்கு நிகழ்வுகள் தொடர்பான ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை உள்ளதா அல்லது நிதியின் திறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் உள்ளதா. ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதி அறிக்கைகளில் தொடர்புடைய வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வாளர் அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டும் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எனது முடிவுகள் எனது கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனது முடிவுகள் எனது தணிக்கையாளர் அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிதியை அதன் கடமைகளை நிறைவேற்றவும் அதன் வணிகத்தைத் தொடரவும் நிதி ரீதியாக தொடர்ந்து நிலைபெறாவதை தடுக்கக்கூடும்.
- வெளிப்பாடுகள் உட்பட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்தலும் நிதி அறிக்கைகள் நியாயமான விளக்கக்காட்சியை அடையும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யதலும்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளனவா என்பது அடங்கலாக மற்றய விடயங்களில், குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்தும் நான் கணக்கீட்டு அலுவலருடன் தொடர்பு கொள்கிறேன்.

## 2. பிற சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

**2.1.** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தேவைகளுக்கான குறிப்பிட்ட விதிகளை உள்ளடக்கியது.

**2.1.1.** நிதியின் நிதிநிலை அறிக்கைகள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d)(iii) ஆம் பிரிவின் தேவைகளுக்கு இணங்குகின்றன.

**2.1.2**. வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iv) இன் தேவையின் படி முந்தைய ஆண்டில் நான் செய்த அனைத்து பரிந்துரைகளும் அடங்கும்.

## 3. செயல்பாட்டு ஆய்வு

### 3.1 சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகளுக்கு இணக்கமற்றவை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) 1953 ஆம் ஆண்டின் 44 எண் பள்ளி ஆசிரியர் ஓய்வூதியச் சட்டத்தின்படி விதிக்கப்பட்ட, ஒவ்வொரு உதவியும் வழங்க தகுதியுள்ள நபர்களின் விவரங்கள் அடங்கிய ஆவணம் மற்றும் 09 (a) ஆம் இலக்க கட்டளையின்படி பராமரிக்கப்படாத பணம் செலுத்தும் நபர்கள்.

(ஆ1953 ஆம் ஆண்டின் 44 எண் பள்ளி ஆசிரியர் ஓய்வூதியச் சட்டத்தின் 04ஆம் இலக்க கட்டளையின்படி

விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகளின் பங்களிப்புகளைக் கண்டறிவதன் மூலம் வழங்கப்பட வேண்டும். எனினும் பங்களிப்பு சேகரிப்பு மற்றும் பணம் செலுத்துவதற்காக தனி வங்கி கணக்கு பராமரிக்கப்படவில்லை அத்துடன் பங்களிப்புகள் பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கில் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அச் செலவீனங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தின் வாக்குகளின் கீழ் செலுத்தப்பட்டுள்ளன.

### 3.2 நிர்வாகத்தின் செயல்பாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியில் பங்களிப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும், அங்கசத்தவர் இலக்கங்கள் அந்தந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது அங்கத்தவத்தைபெறுவதற்காக விண்பத்த உதவிப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட மாதிரி சோதனை மூலம் தெரியவந்தது.

(ஆ) பங்களிப்புகளைப் பெறுவது உட்பட உறுப்பினர்களின் நிதியின் கீழ் தரவுத் தளம் இல்லாததால், பங்களிப்பிலிருந்து மீட்கப்பட்ட தொகையை வரலாற்றுத் தாளுடன் சரிபார்த்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், பங்களிப்பைத் திருப்பிச் செலுத்தும்போது பங்களிப்பாளரின் பங்களிப்பு நிதயில் சரியாகப் பெறப்பட்டதா என்பதை சரிபார்க்க இயலாது.

டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயகம்.

எனது.இல. எல்.ஈ.டபிள்யு/டி/டிஓபி/02/20/59 2021 செப்டெம்பர் 10

பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

2018 **ஆம் ஆண்டின்** 19 **ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்** 11 (1) **ஆம் பிரிவிற்கமைய** 2020 **டிசம்பர்** 31 **ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கை**.

---

## 1. நிதிநிலை அறிக்கைகள்

### 1.1. தகுதிவாய்ந்த கருத்து

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2020 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளின் மீதான கணக்காய்வு இருப்பு நிலை குறிப்புடன் செலவு கணக்கை உள்ளடக்கியதுடன் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் ஆகியவை, உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்தின் 62 ஆம் பிரிவுடன் (264 ஆம் அத்தியாயம்) இணைந்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் பிரிவன் ஏற்பாடுகளிற்கமையவும், எனது வழிகாட்டுதலின் கீழும் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவன் ஏற்பாடுகளுக்கு இசைய எனது அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

என் கருத்துப்படி, 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்றான நிதிநிலை அறிக்கைகள் நிதி நிலை குறித்த உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குவதுடன், இவ்வாண்டிற்கான அதன் நிதி செயல்திறன் மற்றும் அதன் பணப்பாய்ச்சல், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்ப நடைபெற்றுள்ளது.

### 1.2. தகுதிவாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுச் சேவைக்கான கணக்காய்வுத் தரநிலையின் 1 ஆம் இலக்கத்திற்கு ஏற்ப நிதி திரட்டப்பட்ட கணக்குகளை தயாரிக்க வேண்டும் எனினும், ரூ.72,558,585 மதிப்புக்கான பங்களிப்புகள் இருந்தபோதும், வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கு பெறப்பட வேண்டியவை, தேவைக்கேற்ப வரவு வைக்கப்பட்டுள்ளன, ஆனால் இந்த வருடத்தில் பெறப்பட்ட தொகை ரூ .72,230,921 ஆகும், இது கடந்த ஆண்டுகளிற்கான பங்களிப்புகள் ஆகும், இந்த ஆண்டு தொடர்பான மேற்கண்ட கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ .2,672,336 மதிப்பில் காணப்பட்ட வேறுபாடு, பற்றாக்குறையாக அடையாளம் காணப்பட்டது.

(ஆ) நிதி அறிக்கையின்படி 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்றான நிதிப் பங்களிப்புகளை செலுத்தி வந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 302 அத்துடன் அந்த நிறுவனங்களிடமிருந்து மீட்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,143,420,252. எனினும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் படி 97 உள்ளாட்சி நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய தொகை ரூ. 760,406,356 ஆகும். ஆனால் அத்தொகை அவ்வாறான நிறுவனங்களால்

செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புகளாக காட்டப்படவில்லை. மேலும் ஏனைய 103 உள்ளாட்சி நிறுவனங்களால் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புகள் ரூ. 278,494,348, ஆனால் அத்தகைய நிறுவனங்களின் நிதி அறிக்கைகளின்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 184,054,767. எனவே இது ரூ.94,439,581 ஆக மிகைப்படுத்தப்பட்டுள்ளது. 22 உள்ளாட்சி நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய பங்களிப்புகள் ரூ.14,868,309, அந்த நிறுவனங்களின் நிதி அறிக்கையின்படி செலுத்த வேண்டிய பங்களிப்புகள் ரூ.19,567,394. எனவே இது ரூ.4,699,085 ஆக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு (SLAuSs) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். நடத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் கணக்காய்வாளரின் பொறுப்புகளிற்கேற்ப நிதியறிக்கை மீதான கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதே எனது பொறுப்பாகும். நான் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எனது தகுதிவாய்ந்த கருத்துக்களுக்கான அடிப்படையை வழங்க போதுமானதும் பொருத்தமானதும் என்று நான் நம்புகிறேன்.

**1.3. நிர்வாக அறிக்கைகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளுக்கான நிர்வாகப் பொறுப்பு ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கும் இந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கும், மோசடி அல்லது பிழை காரணமாக பொருள் தவறாக இல்லாத நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதும் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில், தடையற்ற நிதிக்கட்டமைப்பை பூர்த்திசெய்தல் போன்ற செயல்பாடுகளை தொடர்வதற்கான இயலுமையை மதிப்பிடல், வெளிப்படுத்துதல், பொருந்தும் வகையில், தடையற்ற நிதிக்கட்டமைப்பு தொடர்பான விடயங்கள் மற்றும் நிர்வாகம் நிதியை கலைக்க அல்லது செயல்பாடுகளை நிறுத்த நினைத்தால் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று இல்லாத சந்தர்ப்பத்தில் அவ்வாறு அமுல்படுத்தல் போன்றவை முகாமைத்துவத்தின் பொறுப்புகள் ஆகும்.

நிதி நிர்வாகத்தை ஏற்று நடாத்துபவர்கள் நிதி அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடும் பொறுப்பிலும் உள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி நிதி மற்றும் வருடாந்த மற்றும் அவ்வப்போதான நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கு, அதன் அனைத்து வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையாகப் பராமரிக்க வேண்டும்.

**1.4. நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்**

ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கைகள் மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருள் தவறாக இல்லாதவாறு , நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காயவு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப நடத்தப்படும் கணக்காய்வு எப்போதுமே ஒரு பொருள் தவறாக இருப்பதை கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. மோசடி அல்லது பிழையிலிருந்து தவறான கருத்துக்கள் எழலாம் என்பதுடன் ,இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் தனிப்பட்ட முறையில் அல்லது மொத்தமாக அவை நியாயமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் தொழில்முறை தீர்ப்பைப் பயன்படுத்துகிறேன் என்பதுடன் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சந்தேகத்தை கொண்டிருக்கிறேன். எனக்கும் கூட:

- மோசடி அல்லது பிழை காரணமாக இருந்தாலும், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துவதற்காக நிதி அறிக்கைகளின் பொருள் தவறான அறிக்கையின் அபாயங்களை அடையாளம் கண்டு மதிப்பிடுதல், மற்றும் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுதல். மோசடியின் விளைவாக ஏற்படும் ஒரு தவறான தகவலைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாக உள்ளது, ஏனெனில் மோசடி கூட்டு, போலி, வேண்டுமென்றே விடுபடுதல், தவறாகப் பிரதிபலித்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லாத ஆனால் சூழ்நிலைகளிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுக்கு உட்பட்ட உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுதல்.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் ஏற்புடைய தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் தொடர்பான தடையற்ற நிதிக்கட்டமைப்பு அடிப்படையில் நிர்வாகத்தின் பயன்பாட்டின் சரியான தன்மை மற்றும் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகளுடன் தொடர்புடைய ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை நிறுவனத்தின் தொடர்ச்சியான தடையற்ற நிதிக்கட்டமைப்பு திறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தலாம். ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதி அறிக்கைகளில் தொடர்புடைய வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வாளர் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் ஒரு நிலையான நிதிக்கட்டமைப்பு தொடர்வதை நிறுத்தக்கூடும்.
- வெளிப்பாடுகள் உட்பட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்தலும் நிதி அறிக்கைகள் நியாயமான விளக்கக்காட்சியை அடையும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யதலும்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளனவா என்பது அடங்கலாக மற்றய விடயங்களில், குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்தும் நான் கணக்கீட்டு அலுவலருடன் தொடர்பு கொள்கிறேன்.

**2. பிற சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை**

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் குறித்த ஏற்பாடுகள் பின்வரும் தேவைகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (I)(d)(iii)ஆம் பிரிவில் குறித்தொதுக்கப்பட்ட தேவைகளின் படி வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் குறித்த விடயங்கள் முந்தைய வருடத்துடன் ஒத்துப்போகின்றன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (I)(d)(iv)ஆம் பிரிவின் படி வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் முந்தைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள், நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

3. **செயல்பாட்டு ஆய்வு**

**3.1. சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்காதவை**

(அ) 2018 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் அடிப்படையில், கடந்த 02 ஆண்டுகளில் செயல்படாத சில நிதிகள் இருந்தால், அத்தகைய நிதிகளைச் செயற்படுத்தி முடிவுறுத்த வேண்டும் மேலும் நிதியங்களின் குறிக்கோள்களை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தால் அடைய முடிந்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 15 (2) (ஆ) ஆம் பந்தியின் மூலம் அறிவிக்கப்பட்டு அத்தகைய நிதிச் செயற்பாடுகளை முடிவுறுத்த வேண்டும். இந்த நிதியின் செயல்பாடுகள் ஓய்வூதியத் திணைக்கள வாக்குகளின் கீழ் வரவு செலவுத் திட்டஏற்பாடுகளிற் கேற்ப நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இன் நிதி செயல்படவில்லை என்பது 04 ஆம் இலக்க கணக்கு குறிப்புகளின் மூலம் தெரியவந்துள்ளது. இருப்பினும் தற்போதுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி நிதியை முடிவுறுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4. பெறத்தக்க கணக்குகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன

(அ) 2012 பிப்ரவரி 08 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை படி, ஒவ்வொரு மாதத்திலுமான உறுப்பினர்களின் மரணம் குறித்த அறிக்கைகளை அடுத்த மாதம் 25 ஆம் தேதிக்கு முன் மாவட்டச் செயலாளர்களிடமிருந்து பெற்று மரணித்த உறுப்பினர்களின் நிதியில் தேவையான திருத்தத்தை சரியான நேரத்தில் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும் 2014 தொடக்கம் 2020 வரையிலான காலகட்டத்தில் 647 உறுப்பினர்கள் தொடர்பாக ரூ. 2,306,611 மதிப்புக்கான பங்களிப்புகள் ஆண்டுதோறும் சரிசெய்தல் செய்யப்படாததால் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி அறிக்கைகளின் அடிப்படையில், 302 உள்ளாட்சி நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய பங்களிப்புகள் ரூ. 1,143,420,252. ஆகும். எவ்வாறாயினும், 88 உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து பெறப்பட வேண்டிய ரூ.459,007,662 தொடர்பான எந்த தொகையும், இது தொடர்பாக நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளின் படி மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அம் மீதி பெறப்படவில்லை.

ஒப்பம்
டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயகம்.

# 4

# செயல்திறன் குறிகாட்டிகள்

## 4.1. நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள் (செயல்த்திட்டத்தின் அடிப்படையில்)

| செயற்பாடு | உப செயற்பாடு | செயல்திறன் குறிகாட்டிகள் | மதிப்பிடப்பட்ட தொகை | எதிர்பார்த்த வெளியீட்டின் உண்மையான வெளியீடு சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **100%-90%** | **75%-89%** | **50%-74%** | **49% இலும் குறைந்த** |
| புதிய ஓய்வூதிய அளிப்பு | பரவலாக்கப்பட்ட பிரிவு- ஓய்வூதிய அளிப்பு | 2020 ஆம் ஆண்டில் ஓய்வூதிய அளிப்புச் செய்யப்பட்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 30,000 | | 82.05% | | |
| | மையப்படுத்தப்பட்ட பிரிவு - ஓய்வூதிய அளிப்பு | | 1,500 | | | 68.60% | |
| | விதவைகள் அனாதைகள் பிரிவு - ஓய்வூதிய அளிப்பு | | 8,000 | 94.87% | | | |
| திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் | பரவலாக்கப்பட்ட பிரிவு - திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் | திருத்தப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து செலுத்தப்பட்ட தொகை | 5,000 | | | | *** 32.22% |
| | மையப்படுத்தப்பட்ட பிரிவு - திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் | | 600 | | | | *** 32% |
| பணிக் கொடையும் ஏனைய கொடுப்பனவுகளும் | மரணப் பணிக் கொடை | | 1,100 | 100.27% | | | |
| | ஊனமுற்றோர் ஓய்வூதியம் | | 5,000 | 93.24% | | | |
| | சத்கார பியஸ்ஸ | நேர்காணலுக்கு அழைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 30,000 | | | 67.64% | |
| மாதாந்த ஓய்வூதியம் | மாதாந்த ஓய்வூதியம் - குடியியல் | மாதந்தோறும் நன்மைகளைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை, | 460,000 | 100% | | | |
| | பணிக் கொடை கொடுப்பனவும் கடன்தவணைக்கட்டணமும் | மாதந்தோறும் நன்மைகளைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை, | 30,000 | | 83.35% | | |
| சமூக நலன் | முப்படைகள் மற்றும் காவல்துறை | மாதந்தோறும் நன்மைகளைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை, | 42,183 | 97% | | | |

| செயற்பாடு | உப செயற்பாடு | செயல்திறன் குறிகாட்டிகள் | மதிப்பிடப்பட்ட தொகை | எதிர்பார்த்த வெளியீட்டின் உண்மையான வெளியீடு சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **100%-90%** | **75%-89%** | **50%-74%** | **49% இலும் குறைந்த** |
| விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு | மாதந்தோறும் நன்மைகளைப் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை, | 185,000 | 100% | | | |
| விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய வருவாய் | மத்திய அரசாங்கம் | மாத வருவாய் | 19000* | 102.41% | | | |
| | மாகாண சபைகள் | மாத வருவாய் | 11700* | 94.18% | | | |
| | ஆசிரியர்களது விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் | மாத வருவாய் | 104* | 231.96% | | | |
| மீள்கொடுப்பனவ செய்யப்பட்ட விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியப் பங்களிப்பு | குடியியல் | பயணாளிகளின் எண்ணிக்கை | 1500 | | | 59.13% | |
| | ஆயுதப்படை | பயணாளிகளின் எண்ணிக்கை | 1300 | | | 74.85% | |
| | ஆசிரியர்களது விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் | பயணாளிகளின் எண்ணிக்கை | 40 | | | 67.50% | |
| பொது சேவை நம்பிக்கை நிதியம் | பொ.சே.ந.நி உறுப்பினர்களின் எண்ணிக்கை. | ஆண்டுதோறும் இணையும் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | 7,000 | 116.08% | | | |
| | பங்களிப்புகளின் கொடுப்பனவு | பயணாளிகளின் எண்ணிக்கை | 7,200 | | | | *** 49.73% |
| | பங்களிப்புகளின் பெறுகைகள் | மாதாந்த பங்களிப்பு 8% மற்றும்12% | 760* | 112% | | | |
| | முதலீடு | இவ்ஆண்டில் புதிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன | 6400* | 114.75% | | | |
| மனிதவள அபிவிருத்தி | கோவை முகாமைத்துவம் | இற்றைப்படுத்தப்பட்ட கோவைகள் | | 100% | | | |
| | திறன் அபிவிருத்தி | பயிற்சி திட்டத்தின் படி பயிற்சி திட்டங்களை நடத்துதல் | | | | 60% | |
| கணனித் தொகுதி மேம்பாட்டு செயல்பாடுகள் | கணனித் தொகுதி பராமரிப்ப | அமைப்புகளில் துல்லியமான செயல்பாடு | | 100% | | | |

| செயற்பாடு | உப செயற்பாடு | செயல்திறன் குறிகாட்டிகள் | மதிப்பிடப்பட்ட தொகை | எதிர்பார்த்த வெளியீட்டின் உண்மையான வெளியீடு சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **100%-90%** | **75%-89%** | **50%-74%** | **49% இலும் குறைந்த** |
| வன்பொருட்களின் அபிவிருத்தி | மடிக் கணனிகளின் கொள்வனவு | மடிக் கணனிகளின் எண்ணிக்கை | 10 | 100% | | | |
| | மேசைக் கணனிகளின் கொள்வனவு | மேசைக் கணனிகளின் எண்ணிக்கை | 10 | 100% | | | |
| நிறுவனத்தின் சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் | விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியப் பிரிவை மாற்றியமைத்தல் | 2020 ஆம் ஆண்டுக்குள் அனைத்து திட்டங்களையும் முடிவுறுத்தல் | | | | 50% | |
| | களனி மற்றும் வேதமுல்லா விடுமுறை விடுதி கட்டிடத்திற்கு வண்ண சாந்து பூசி மாற்றியமைத்தல் | | | 100% | | | |
| ஓய்வூதிய நிலுவைத் தொகை கொடுப்பனவு | குடியியல் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 8,000 | 115.03% | | | |
| | ஆயுதப்படை | | | | | | |
| | முரண்பாட | | | | | | |
| வெளிநாட்டு ஓய்வூதிய கொடுப்பனவு | குடியியல் ஓய்வூதியம் | விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 320 | 100.31% | | | |
| | விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் | | 300 | | | | *** 40.66% |
| | ஓய்வூதிய திருத்தம் | | 500 | *2180.20 % | | | |
| | ஓய்வூதியத்தில் நிலுவைத் தொகையை கொடுப்பனவு செய்தல் | | 1000 | ** 782.40% | | | |

*14/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி வெளிநாட்டில் தங்கியுள்ள ஓய்வூதியர்களின் முரண்பாடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேலும் 2020 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களின் எண்ணிக்கை ஏறத்தாள 500 ஆகும். இருப்பினும் அந்த ஆண்டில் 10,091 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இது ஒரு சதவீதமாக 2180.20மூ ஆகும்.

** 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட நிலுவைத் தொகையின் அளவ ஏறத்தாள 1000 அத்துடன் வருடாந் பயனாளிகள் எண்ணிக்கை 7,824 வரை அதிகரித்துள்ளது. இது 782.40மூ சதவீதமாகும்.

*** தீவு முழுவதும் பரவலான தொற்றுநோய் காரணமாக அலுவலக செயல்பாடுகளை சாதாரண வேகத்தில் மேற்கொள்ள முடியவில்லை என்பதால், பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட தொகையை விட குறைந்த மட்டத்தில் இருந்ததால், முன்னேற்றத்தில் சரிவு காட்டப்பட்டது.

5

# நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் செயல்திறன்

## 5.1. அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள்

| இலக்கு / குறிக்கோள் | இலக்கு | சாதனைகளுக்கான குறிகாட்டிகள் | இதுவரை செய்த சாதனைகளின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| எந்த இடத்திலும் எந்த மட்டத்திலும் காணப்படுகிற வறுமையை இல்லாதொழித்தல் | நிலைபேறான மற்றும் சமூக பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குதலும் நிறுவுதலும் | பாலின அடிப்படையில் ஓய்வூதியம் பெறும் முதியோர் மக்கள் தொகை | | | |

## 5.2. நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனைகளும் அதன் சவால்களுமெ.

* நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடிய பதவியில் பணியாற்றிய பின்னர் பொது சேவையில் இருந்து ஓய்வுபெறும் நபர்களின் ஓய்வூதிய உரித்தை வழங்குவது ஓய்வூதியத் திணைக்களத்தின் முக்கிய பங்கு ஆகும். மொத்த மக்கள் தொகையில் ஓய்வூதியர்களின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3% ஆகும்.

* இலங்கையின் மக்கள் தொகையின் எதிர்கால கணிப்புகளையும் தேவைகளையும் கருத்தில் கொண்டு, 2020 ஆம் ஆண்டில் "அனைவருக்கும் ஓய்வூதியம்" என்ற பெயரில் ஒரு முன்மொழிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், ஒவ்வொரு குடிமகனுக்கும் ஓய்வூதியம் பெறும் வகையில் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்தக் கொள்கையோ அல்லது மேற்கூறியவற்றைப் பயன்படுத்தி மேம்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் கொள்கையோ ஓய்வூதியத்திற்கான அரசின் கொள்கையாக அங்கீகரிக்கப்பட்டால், நிலைபேறான வளர்ச்சி இலக்குகளுக்கு பொருந்தக்கூடிய துணை குறிகாட்டி தொடர்பான குறிக்கோள்களை அடைய முடியும்.

* அத்தகைய கொள்கை பயன்படுத்தப்படும்போது, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு மேலதிகமாக சமூக சேவைகள் அமைச்சு, தொழிலாளர் திணைக்கம், மற்றும் விவசாய காப்புறுதிச் சபை மற்றும் பிற சர்வதேச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் போன்றவற்றின் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும்.

6

# மனித வள விவரம்

## 6.1. ஆளணி முகாமைத்துவம்

| | அனுமதிக்கப்பட்ட ஆளணி | காணப்படும் உத்தியோகத்தர்கள் | வெற்றிடம் (மேலதிகம்) |
|---|---|---|---|
| சிரேஸ்ட | 34 | 26 | 8 |
| 3ஆம் நிலை | 11 | 05 | 6 |
| இரண்டாம் நிலை | 1078 | 931 | 147 |
| முதன்மை | 75 | 59 | 16 |
| **மொத்தம்** | **1198** | **1021** | **177** |

## 6.2. மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலஅளவு | மொத்த முதலீடு (ரூ) | | நிகழ்ச்சித் திட்டத்தின் வகை (உள்நாடு / வெளிநாடு) |
|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | |
| ஆண்டு அறிக்கைகள் தயாரித்தல் - APFA | 2 | ஒரு நாள் | 8000 | | உள்நாடு |
| அரசு ஊதிய முறைமை - மிலோடா | 2 | 03 நாட்கள் | 36,000 | | |
| பொருளாதார அபிவிருத்தி குறித்த டிப்ளோமா - யுஓசி டி.கே.ஆர்.ஏ. | 1 | 01 வருடம் | 91,500 | | |
| கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர்களின் ஓய்வூதிய நலன்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை | 40 | ஒரு நாள் | 21,425 | | |
| முதுகலை பட்டப்படிப்பு திட்டம் - கொ.ப | 1 | 01 வருடம் | 147,500 | | |
| W & OP புதிய இயங்கலை முறைமை | 60 | ஒரு நாள் | 33,090 | | |
| W&OP தீவின் உள் அனைத்து கணக்காய்வாளர்களுக்கும் புதிய இயங்கலை முறைமை | 65 | ஒரு நாள் | 36,025 | | |
| அரசு ஊதிய முறைமை - மிலோடா | 2 | 03 நாட்கள் | 36,000 | | |
| ஓய்வூதியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்- மோனராகலை மாவட்டம் | 85 | ஒரு நாள் | 55,549 | | |
| வணிக நிர்வாக முதுமாமணி | 2 | 01 வருடங்கள் | 1,150,000 | | |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலஅளவு | மொத்த முதலீடு (ரு) | | நிகழ்ச்சித் திட்டத்தின் வகை (உள்நாடு / வெளிநாடு) |
|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | |
| ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தின் இயங்கலை முறைமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 32 | ஒரு நாள் | 190,000 | | உள்நாடு |
| கொழும்பு மாவட்ட செயலகத்தில் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தின் இயங்கலை முறைமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 63 | 05 நாட்கள் | 7,700 | | |
| கண்டி, நுவரேலியா, மாத்தளை மற்றும் கேகாலை மாவட்ட செயலகங்களில் உள்ள ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தின் இயங்கலை முறைமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 90 | ஒரு நாள் | 67,300 | | |
| வரவு செலவுத் திட்ட செலவினங்களுக்கான மதிப்பீடுகளை தயாரித்தல் 2021. | 60 | ஒரு நாள் | 43,200 | | |

# 7

# இணகக் குறிப்பறிக்கை

| தொ.இல | பொருந்தக்கூடிய தேவைகள் | இணக்கத்தின் தன்மை (இணங்க/ இணங்கவில்லை) | இணங்கவில்லையெனில் சுருக்கமான தெளிவு. | எதிர்காலத்தில் இதுபோன்ற இணக்கமற்ற சூழ்நிலைகளைத் தவிர்க்க முன்மொழியப்பட்ட பொருத்தமான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1.** | **பின்வரும் நிதிநிலை அறிக்கைகள்/ கணக்குகள் உரிய தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | ஆண்டு நிதிநிலை அறிக்கைகள் | இணங்கியது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் பிகணக்க | இணங்கியது | | |
| 1.3 | வர்தக மற்றும் உற்பத்திகளின் முற்பணக் கணக்கு (வர்தக முற்பணக் கணக்கு) | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | | | |
| 1.6 | இதர | | | |
| **2.** | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் பராமரிப்பு (நி.ஒ. 445)** | | | |
| 2.1 | 267/2018 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி தேவையான இற்றைப்படுத்தலுடன் சொத்து பதிவேட்டை பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.2 | தேவையான இற்றைப்படுத்தலுடன் தனிப்பட்ட ஊதிய பதிவேடு / கூலி அட்டைகள் ஆகியவற்றைப் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.3 | தேவையான இற்றைப்படுத்தலுடன் கணக்காய்வு ஐயவினாக்களின் பதிவேடுகளைப் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.4 | தேவையான இற்றைப்படுத்தலுடன் உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களின் பதிவேடுகளைப் பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்தலும் அவற்றை பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தலும். | இணங்கியது | | |
| 2.6 | தேவையான இற்றைப்படுத்தலுடன் காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைப் பதிவேட்டை பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.7 | தேவையான இற்றைப்படுத்தலுடன இருப்புகளை பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.8 | தேவையான இற்றைப்படுத்தலுடன களஞ்சியப் பதிவேட்டை பராமரித்தல் | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.9 | தேவையான இற்றைப்படுத்தலுடன் இழப்புகள் மற்றும் சேதங்களுக்கான பதிவேட்டை பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.10 | தேவையான இற்றைப்படுத்தலுடன் பொறுப்பு பதிவேட்டை பராமரித்தல் | இணங்கியது | | |
| 2.11 | தேவையான புதுப்பித்தலுடன் எதிர் சேவை பதிவேட்டைப் பராமரித்தல் (புயு - ே20) | இணங்கியது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை கையளித்தல் (நி.ஒ. 135)** | | | |
| 3.1 | நிறுவனத்திற்குள் நிதி கட்டுப்பாட்டுக்கான அதிகாரத்தை கையளித்தல் | இணங்கியது | | |
| 3.2 | நிறுவனத்திற்குள் நிதிக் கட்டுப்பாட்டுக்கான அதிகாரத்தைக் கையளித்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | இணங்கியது | | |
| 3.3 | ஒவ்வொரு பரிவர்த்தனையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான அதிகாரத்தை வழங்குதல் | இணங்கியது | | |
| 3.4 | 11.05.2014 திகதியிட்ட 171/2004 ஆம் இலக்க பொது கணக்கு சுற்றறிக்கையின் படி அரச சம்பள மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்தும் போது கணக்குகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்தல் | இணங்கியது | | |
| **4** | **ஆண்டு திட்டங்களை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல் | இணங்கியது | | |
| 4.2 | வருடாந்த பெறுகை திட்டத்தை தயாரித்தல் | இணங்கியது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக்கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் | இணங்கியது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதற்கான திகதியில் பாதீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் ^ NBD & | இணங்கியது | | |
| 4.5 | வருடாந்திர பணப்பாய்ச்சல் அறிக்கைகளை திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய தேதியில் சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| **5** | **கணக்காய்வு ஐயவினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பிய அனைத்து ஐயவினாக்களுக்கும் உரிய திகதியில் பதில்களை வழங்குதல் | இணக்கமில்லை | *கணக்காய்வாளர் நாயகத்திற்குப் பதில்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படுகிறது, ஏனெனில் இது பிரதேச | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயலகங்கள் மற்றும் இணைக்கப்பட்ட பிற நிறுவனங்களிலிருந்து பதில்களை பெறவேண்டியதுடன் திருத்தங்களையும் செய்ய வேண்டும். | |
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | 134 (2) (டி.எம்.ஏ / 1-2019) ஆம் இலக்க நிதி ஒழுங்குமுறை படி ஆண்டின் தொடக்கத்தில் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின்னர் தயாரித்தல் | இணங்கியது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்களை உருவாக்குதல் | இணங்கியது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்திற்கு 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் படி சமர்ப்பித்தல். | இணங்கியது | | |
| 6.4 | 134 (3) ஆம் நிதி ஒழுங்குமுறையின் படி உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர்நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமில்லை | | |
| **7** | **கணக்காய்வு முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | 1-2019 ஆம் இலக்க டி.எம்.ஏ சுற்றறிக்கையின் படி இவ் ஆண்டுக்குள் குறைந்தது கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் 04 கூட்டங்களை நடத்துதல். | இணக்கமில்லை | COVID 19 தொற்றுநோய்களுக்கு இடையே எழுந்த நிலைமை காரணமாக அதிகாரிகள் வெளி நிறுவனங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று கட்டாயப்படுத்தப்பட்டதால் கூட்டங்கள் தடை செய்யப்பட வேண்டியிருந்தது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | **சொத்து மகாமைத்துவம்** | | | |
| 8.1 | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல் 01.∴2017 இன் அத்தியாயம் 07 இன் படி சொத்துக்களை வாங்குதல் மற்றும் அகற்றுவது பற்றிய விவரங்களை செலவுக் கட்டுப்பாட்டாளர் அதிபதி அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல். | இணங்கியது | | |
| 8.2 | 13 வது அத்தியாயத்தின் படி மேற்கண்ட சுற்றறிக்கையில் உள்ள விதிகளை ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான அதிகாரியை நியமித்தல் மற்றும் நியமிக்கப்பட்ட அதிகாரியின் விவரங்களை செலவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் தெரிவித்தல் | இணங்கியது | | |
| 8.3 | 01.∴2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் படி கணிப்பீட்டுச் சபைகளை நடத்துதல் மற்றும் அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணங்கியது | | |
| 8.4 | வருடாந்த கணிப்பீட்டு குழுவில் எழுப்பப்பட்ட உபரிகள், குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் குறித்த சுற்றறிக்கையால் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்குள் நடவடிக்கைகள் எடுப்பது. | இணங்கியது | | |
| 8.5 | F. R. 772 இன் படி பயன்பெறமுடியாத முடியாத பொருட்களை அகற்றுவது | இணங்கியது (2019 ஆம் ஆண்டின் கணிப்பீட்டுக் குழுவில் அடையாளம் காணப்பட்ட பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன) | | |
| 9. | **வாகனங்களின் முகாமைத்துவம்** | | | |
| 9.1 | பொதுபாவனை வாகனங்களுக்கான தினசரி மற்றும் மாதாந்தம் இயக்கும் விளக்கப்படங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை கணக்காய்வாளருக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| 9.2 | அத்தகைய வாகனங்கள் சேவைக்க உகந்ததல்லாத போது 06 மாதங்களுக்குள் வாகனங்களை அகற்றுவது | இணங்கியது | | |
| 9.3 | தேவையான புதுப்பித்தலுடன் வாகனங்களின் பதிவு புத்தகங்களை பராமரித்தல் | இணங்கியது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்துக்கும் நிதி ஒழுங்குமுறை எண் 103,104,109 மற்றும் 110 ன் படி நடவடிக்கை எடுப்பது | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.5 | 29.12.2016 ஆம் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 30.'.2016 இன் பந்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மறு ஆய்வு செய்தல் | இணங்கியது | | |
| 9.6 | குத்தகை காலத்தின் முடிவில் மாற்றப்பட்ட வாகனங்களின் உரிமையைப் பெறுதல். | இணங்கியது | | |
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி நல்லிணக்க அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்தல் மற்றும் தேவையான சான்றிதழ்களுடன் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல். | இணங்கியது | | |
| 10.2 | முந்தைய ஆண்டுகளில் அல்லது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து முன்வைக்கப்பட்ட செயலற்ற கணக்குகளின் தீர்வு | இணங்கியது | | |
| 10.3 | ஒரு மாதத்திற்குள் வங்கி நல்லிணக்க அறிக்கையால் வெளிப்படுத்தப்பட்ட நிலுவைகள் குறித்த நிதி விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுப்பது மற்றும் அவற்றை சரிசெய்து. | இணங்கியது | | |
| **11** | **நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தல்** | | | |
| 11.1 | தரப்பட்ட ஏற்பாட்டின் எல்லையை மீறாதவாறு தாங்கி செலவிடல். | இணங்கியது | | |
| 11.2 | நி.ஒ 94 (1) இறகமைய வழங்கப்பட்ட ஏற்பாடினது பயன்பாட்டின் பின்னர் ஏற்பாட்டின் இருப்புக்கான எல்லையை மீறக்கூடாது என்பதற்கான பொறுப்புகளை உருவாக்கல் | இணங்கியது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பண பி கணக்கு** | | | |
| 12.1 | வரம்புகளுக்கு இணங்க வேண்டும் | இணங்கியது | | |
| 12.2 | நிலுவைத்தொகையை குறித்த காலத்தினுள் பகுப்பாய்வ செய்தல் வேண்டும் | இணங்கியது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கு மேலாக செலுத்தப்படாத கடன் நிலுவை மீதியை தீர்தல் | இணக்கமில்லை | * மீதித் தொகையை இரத்துச் செய்ய அனுமதி கோரி அவ் விபரம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரது அனுமதிக்காக முன்னிலைப்படுத் தப்பட்டுள்ளது | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | நி.ஒ 571 இன் பிரகாரம் இழந்த வைப்புகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல். | இணங்கியது | | |
| 13.2 | பொது வைப்பு கணக்கின் கட்டுப்பாட்டைப் தேவையான இற்றைப்படுத்தலுடன் பராமரித்தல் | இணங்கியது | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு மதிப்பாய்விற்காக வருடமுடிவில் காசுப் பதிவேட்டை அனுப்புதல் | இணங்கியது | | |
| 14.2 | நி.ஒ 371 இன் பிரகாரம் வேலை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தற்காலிக கட்டு நிதி கணக்கு வழங்கப்பட்டு தீர்க்கப்படல் வேண்டும் | இணங்கியது | | |
| 14.3 | தற்காலிக கட்டு நிதி கணக்கு நி.ஒ 371 இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லையை தாண்டாத வகையில்வழங்கல் | இணங்கியது | | |
| 14.4 | முாதாந்த கட்டு நிதிக் கணக்கு மீதி பொதுத் திறைசேரி கணக்குப் புத்தகத்துடன் சமப்படல் வேண்டம் | இணங்கியது | | |
| 15 | **வருவாய்க கணக்கு** | | | |
| 15.1 | பொருத்தமான சட்ட திட்டங்களிற்கேற்ப பெறப்பட்ட வருவாய்க்கு பணத்தைச் திருப்பிச்செலுத்துதல் | இணங்கியது | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருவாயை வைப்புக் கணக்கில் வரவ வைக்காது வருவாயில் நேரடியாக வரவு வைத்தல் | இணங்கியது | | |
| 15.3 | நி.ஒ 176 இன் பிரகாரம் நிலுவை வருவாய் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதிக்கப்பட்ட ஆளணி எல்லைக்குள் அலுவலர்கள் எண்ணிக்கையைப் பேணுதல் | இணங்கியது | | |
| 16.2 | அனைத்து அலுவலர்களுக்கும் எழுத்து மூலம் கடமைப் பட்டியலை வழங்குதல் | இணங்கியது | | |
| 16.3 | 04/2017 ஆம் இலக்க 20.09.2017 ஆம் திகதிய எம.எஸ்டி சுற்றறிக்கைக்கமைய அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இணங்கியது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **17** | **பொது மக்களுக்கு தகவல்களை வழங்கல்** | | | |
| 17.1 | தகவல்களை வழங்கும் அலுவலரை நியமித்தலும் தகவல்களை அறியும் உரிமைச் சட்டம் மற்றும் பிற சட்டங்களிற்கமைய தகவல்களை வழங்கலும் பதிவேடுகளை பேணலும் | இணங்கியது | | |
| 17.2 | நிறுவனத்தின் தகவல்களை இணையத் தளத்தின் ஊடாக வழங்கலும் மேலும் பொதுமக்களுக்கான அவர்களது புகார்களையும்/ பாரட்டுகளையும் இணையத் தளத்தினூடாகவோ வேறு வழிகளிலோ பெறுவதற்கான வசதிகளை உறுதிப்படுத்தல் | இணங்கியது | | |
| 17.3 | ஆண்டு அல்லது அரையாண்டு அறிக்கைகளை 08 மற்றும் 10 ஆம் இலக்க தகவல்களை அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பித்தல் | இணங்கியது | | |
| **18** | **சேவை பெறுனர் பட்டயத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2018 (1) ஆம் இலக்க பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை பெறுனர் பட்டயத்தை தயாரித்தலும் அமுல்படுத்தலும் | இணக்கமில்லை | | |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் சேவை பெறுனர் பட்டயத்தை தயாரித்தலையும் அமுல்படுத்தலையும் கண்காணிப்பதற்கும் மதிப்பிடுவதற்குமான ஓர செயல்முறையை உறுதிப்படுத்தல் | இணக்கமில்லை | | |
| **19** | **மனிதவளத் திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 02/2018 ஆம் இலக்க 2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் 02 ஆம் இணைப்பின் பிரகாரம் மனிதவளத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமில்லை | 02ஆம் இணைப்பின் பிரகாரம் இத் திட்டத்தைத் தயாரித்தலில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன. ஆகவே நிறுவனத்திற்குப் தேவையான பொருத்தமான மனித வள திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.2 | ஒவ்வொரு அலுவலர்களும் மனிதவள திட்டத்தின் படி வருடமொன்றிற்கு குறைந்தது 12 மணித்தியாலம் பயிற்சி நெறி கிடைக்கும் சந்தர்பம் உறுதிப்படுத்தப்படுகிறது. | இணக்கமில்லை | ஆதிகரித்து செல்லும் கோவிட் 19 பெருந் தொற்றின் காரணமாக சுகாதார வழிகாட்டல்களிற் கமைய நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட் டன. | |
| 19.3 | மேற் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 01 ஆம் இணைப்பில் தரப்பட்ட மாதிரியின் அடிப்படையில் அனைத்து அலுவலர்களுடனும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடல் | இணக்கமில்லை | இவ் ஒப்பந்தம் பதவி நிலை அலுவலர்களுடனு ம் மாத்திரம் கைச்சாத்திடப்படு கிறது | |
| 19.4 | மேற் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை மேம்படுத்தலும் மனிதவள திட்டத்தினைத் தயாரித்தலும் அத்துடன் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்க பொறுப்பை ஒரு சிரேஸ்ட அலுவலரிடம் கையளித்தல். | இணங்கியது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளிற்கு பதில்களை உருவாக்கல்** | | | |
| 20.1 | கடந்த காலங்களிற்கு கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளால் குறித்துரைக்கப்பட்ட குறைபாடுகளில் திருத்தம். | இணங்கியது | | |